பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 09 வெள்ளிக்கிழமை (23-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:178

## புலிகளின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் சுட்டுக்கொலை!

### நிந்தவூரில் சம்பவம்

கொழும்பு,மே23

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு முக்கியஸ்தர் பூவண்ணன் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

காரைதீவைச் சேர்ந்த பூவண்ணன் (காத்தமுத்து கோணேஸ்வரன் -வயது 24) நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் கடத்திச் செல்லப்பட்டார் என்றும் -

நேற்றுக் காலை நிந்தவூர் வயல் வெளியில் சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்மாந்துறைப் பொலீஸார் சடலத்தைக் கல்முனை ஆதார வைத்திய சாலையில் சேர்த்தனர்.

கல்முனை மாவட்ட நீதிபதி எஸ். தட்சணாமூர்த்தி வைத்தியசாலைக் குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

பூவண்ணனின் தலையில் ஒரு வேட்டும், முதுகுப்புறத்தில் பல வேட்டுக்களும் விழுந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா உட்பட புலிகளின் முக்கியஸ்தர்கள் வைத்தியசாலைக்கு வந்து பூவண்ணனின் சடலத்தைப் பொறுப்பேற்று கொக்கட்டிச் சோலைக்குக் கொண்டு சென்றனர்.

பூவண்ணன் கடந்த 10 வருடங்களுக்கு மேலாகப் புலிகளின் புலனாய்வுப் பிரிவில் செயற்பட்டு வந்தார் என்று கூறப்படுகிறது. (ம)

## ஈ.பி.டி.பியினர் மீது புலிகள் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,மே23

தமது இயக்கப் போராளியான பூவண்ணனை (காத்தமுத்து கோணேஸ்வரன்) ஈ.பி.டி.பியினரே கடத்திச் சென்று கொலை செய்துள்ளனர் என்று புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை அரசியல்துறை இது தொடர்பாக நேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாட்டில் தற்போது தோன்றியுள்ள அமைதிச் சூழலைச் சீர்குலைத்து மீண்டும் ஒரு யுத்தத்தை ஏற்படுத்தி சுயலாபம் தேடமுனையும் சில தீயசக்திகள் தற்போது தமது அடாவடித்தனங்களைக் காட்டிவருகின்றன.

கடந்தகால யுத்தத்தினால் சுயலாபம் அடைந்த தமிழ் விரோதக் கும்பல்களின் அடாவடித்தனங்களில் ஒன்றாகவே நேற்றுமுன்தினம் (21.05. 2003) எமது இயக்கப் போராளியான பூவண்ணனின் (காத்தமுத்து கோணேஸ்வரன்) திட்டமிட்ட கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காரைதீவில் வைத்து ஈபிடிபி. கும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே அனுசரணையாளர் ஊடாக

# அரசு உறுதிமொழி தந்தால் புலிகள் ஜப்பான் மாநாட்டில் பங்குபற்றுவர்!

## கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வன் நேற்று விளக்கமாகத் தெரிவிப்பு

கிளிநொச்சி,மே23

**புலிகளின் நிலைப்பாட்டை மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்திவிட்டார். அதற்கு அரசு, ஆக்கபூர்வமான பதிலை - உறுதிமொழியை - அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பின அங்கீகாரத்துடன் தருமானால் ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்குபற்றப் புலிகள் தயாராக இருக்கின்றார்கள்.**

**புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று கிளிநொச்சியில் வைத்து இவ்வாறு அறிவித்தார்.**

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை தலைமைச் செயலகத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு செய்தியாளர் மாநாடு ஒன்றை தமிழ்ச்செல்வன் நடத்தினார்.

உள்நாட்டு வெளிநாட்டு செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் அறுபது செய்தியாளர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றினர். அவர்களின் பல்வேறு கேள்விகளுக்கு விளக்கமாகப் பதிலளித்த தமிழ்ச்செல்வன், புலிகளின் தற்போதைய அரசியல் நிலைப்பாட்டை அவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார்.

நோர்வே அனுசரணையாளர் விடர் ஹெல்கிஸனுக்கு நேற்றுமுன்தினம்மதியுரைஞர் பாலசிங்கம் வரைந்த கடிதத்தில் விவரிக்கப்பட்டிருந்த புலிகளின் நிலைப்பாட்டை மேலும் விளக்கும் விதத்தில் தமிழ்ச்செல்வன் கருத்து வெளியிட்டார்.

அவற்றின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

இலங்கை அரசின் இந்த அரசமைப்பை தமிழ் மக்கள் ஏற்கவில்லை; அங்கீகரிக்கவில்லை. தமிழ் மக்களின் அபிலாஷைகளை அது நிறைவு செய்யவும் இல்லை.

எனவே, அந்த அரசமைப்பின் கீழ் எமக்கு உரியது கிடைக்கும் என நாம் எதிர்பார்க்கவில்லை.

யுத்த நிறுத்தமும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் தற்போதைய அரசமைப்புக்கு வெளியில்தான் செய்யப்பட்டன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகள் நடைபெறும் திகதிகளில் மாற்றம்

தென்னிலங்கை வெள்ளம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள், எதிர்வரும் 31ஆம் திகதியும் ஜூன் முதலாம் திகதியும் நடைபெறும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

கடந்த 19ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த இரு, நாள் பரீட்சைகள் வெள்ளம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டமை தெரிந்ததே.

கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு நடத்திய கலந்துரையாடலில் பரீட்சைகள் மீண்டும் நடத்தும் திகதிகள் குறித்து தீர்மானிக்கப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்திருக்கிறார்.

ஒரு பரீட்சார்த்தி குறிப்பிட்ட பரீட்சை நிலையத்துக்குச் செல்ல முடியாதிருந்தால் அருகிலுள்ள மற்றொரு நிலையத்துக்குச் சென்று பரீட்சைக்குத் தோற்ற முடியும் எனவும் பரீட்சை ஆணையாளர் கூறினார்.

## புலிகளின் கோரிக்கை குறித்து அரச உயர்மட்டம் ஆராய்கிறது

கொழும்பு, மே23

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான புதிய யோசனை குறித்து அரச உயர் மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனையை அடக்கிய கடிதத்தை விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நோர்வே அனுசரணைக் குழுவின் தலைவர் விடர் ஹெல்கிஸனுக்கு நேற்றுமுன

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு இராஜதந்திரிகளிடம் கூட்டமைப்பு

### நேரில் சந்தித்து வலியுறுத்துகிறது

கொழும்பு, மே23

விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனையை நிறைவேற்ற அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படி தமிழ்க் கூட்டமைப்பினர் வெளிநாட்டு ராஜதந்திரிகளை வலியுறுத்தி வருகின்றனர்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ஜோசெப் பரராஜசிங்கம், என்.ரவிராஜ், ஜி.ஜி.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வாகரைப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் கொலை!

கொழும்பு;மே23

மட்டக்களப்பு வாகரைப் பிரதேச சபை முன்னாள் தலைவர் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

ரெலோ உறுப்பினரான ஜஸ்டின் என்றழைக்கப்படும் என். புஷ்பராஜ் நேற்றிரவு 9 மணியளவில் வாழைச் சேனையில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

திருகோணமலையில் வசித்து வந்த இவர் இரண்டு நாள்களுக்கு முன்பே வாழைச்சேனைக்கு வந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவரது சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கி 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு...

நிலையான வைப்புகளுக்கு 1.5% மேலதிக மாதாந்த வட்டியை வருடாந்தம் வழங்குகின்றது.

இன்றே அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதம் 9.7% வருடாந்த விளைவு வட்டி 10.1%

கௌரவ

மூத்த பிரஜைகளை கௌரவிக்கும் திட்டம்

NSB

உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

PHOENIX O&M

# புலிகள் சேகரித்த நிவாரணப் பொருள்கள் களுத்துறை, இரத்தினபுரியில் விநியோகம்

## நாளை நுவரெலியா அகதிகளுக்குக் கிடைக்கும்

வடக்கில் விடுதலைப் புலிகள், பொதுமக்களிடம் சேகரித்த நிவாரணப் பொருள்கள் தெற்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக விநியோகிக்கப்படுகின்றன.

புலிகளின் நிவாரணப் பொருள்கள் ஆறுலொறிகளில் கொண்டு வரப்பட்டுள்ளன. இப்பொருள்களுடன் அமைச்சர் பெ.சந்திரசேகரன், வன்னியா புலிகள் இயக்க அரசியல் பொறுப்பாளர் எழிலன் ஆகியோரும் தென்னிலங்கை செல்கின்றனர். நேற்று புலிகளின் நிவாரணப் பொருள்களின ஒரு தொகை களுத்துறையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டது. இன்று இரத்தினபுரியில் வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்படும்.

நுவரெலியாவில் மண்சரிவு காரணமாக வீடுகளை இழந்து பரிதவிப்பவர்களுக்கு நாளை இந்த நிவாரண பொருள்கள் விநியோகிக்கப்படும்.

# நிவாரணப் பொருள் விநியோகத்தில் இரு பிரிவினருக்கிடையே மோதல்!

## குருவிட்ட பொலீஸாரால் மூவர் கைது

கொழும்பு,மே23

இரத்தினபுரி பகுதியில் நிவாரண உதவிகளை மக்களுக்கு விநியோகிக்கவந்த ஒரு பிரிவினருக்கும் மற்றொரு பிரிவினருக்குமிடையே நேற்று மோதல் ஏற்பட்டது. இம்மோதலை அடுத்து குருவிட்ட பொலீஸாரினால் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

நிவாரணப் பொருள்களை விநியோகிக்கவந்த ஒரு பிரிவினர் இரவானதால் அப்பகுதியில் தங்கிவிட்டனர். அப்பொழுது அங்கு லொறியில் வந்த மற்றொரு பிரிவினர் வேறு ஒரு பகுதிக்கு விநியோகிக்க நிவாரணப் பொருள்களைத் தருமாறு கோரியிருக்கின்றனர்.

நிவாரணப் பொருள்களை எடுத்து வந்தோர் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாததால் இரு பிரிவினருக்குமிடையே வாய்த்தர்க்கம் மூண்டது. அதையடுத்து நிவாரணப் பொருள்களை எடுத்துவந்தோர் இது குறித்து குருவிட்ட பொலீஸில் முறைப்பாடு செய்திருக்கின்றனர்.

அந்த இடத்துக்கு விரைந்த பொலஸார், நிவாரணப் பொருள்களைக் கோரிய மூவரையும் கைதுசெய்தனர்.

# வெள்ளம்வடிய நடவடிக்கை எடுக்காததால் மாத்தறை நகரில் மக்கள் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு.மே23

மாத்தறை மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ளம் வடிந்தோட நடவடிக்கை எடுக்கப்படாததை ஆட்சேபித்து மாத்தறைப் பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். மாத்தறை நகரசபை அருகே நேற்று முற்பகல் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நில்வளகங்கை திட்டத்தின் அணைக் கட்டு ஒன்று வெட்டப்பட்டதால் உயன்வத்த, பலதுவ உட்பட பல பகுதிகளில் இன்னும் வெள்ளம் வடியாதிருக்கின்றது.

இதற்கிடையே, மாத்தறை நகருக்கு வெளியேயுள்ள பிரதேச மக்களுக்கு உரிய விதத்தில் நிவாரணம கிடைக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது. நிவாரண உதவிகளை உரியவாறு வழங்குமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினர்.

(ம)

# ஐக்கிய உலக கல்லூரி அமைப்பின் மாநாட்டில் 4 யாழ். மாணவர்கள்

யாழ்ப்பாணம்,மே23

ஐக்கிய உலகக் கல்லூரிகளின் தென்கிழக்காசியப் பிரிவின் ஏற்பாட்டில் சிங்கப்பூரில் நடைபெற உள்ள 'சமாதானத்துக்கான முன்னெடுப்பு' மாநாட்டில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்

இந்த நான்கு மாணவர்களும் யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்தவர்கள்.

உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் குமாரவடிவேல் குருபரன், மகாலிங்கம் அன்பரசன், தாசியஸ்தேவராஜா ஜெயதர்சன், சிவானந்தமூர்த்தி ஜனகன் ஆகிய நால்வருமே மாநாட்டில் கலந்துகொள்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த நால்வரும் 'இலங்கையின் போர் அனுபவங்களும் அதனூடான தீர்வுகளும்' என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரைகளை ஐக்கிய உலகக் கல்லூரிகளின் நிறுவனத்துக்குச் சமர்ப்பித்திருந்தனர். அதனடிப்படையிலேயே அவர்கள் நால்வரும் அடுத்த மாதம் 21ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெறவுள்ள அந்த அமைப்பின் புத்தாக்க மாநாட்டிலும் பயிற்சிப் பட்டறையிலும் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். (ம-6)



ஐக்கிய உலக கல்லூரி அமைப்பின் மாநாட்டுக்குத் தெரிவான யாழ். இந்துக் கல்லூரியின் நான்கு மாணவர்களும் அதிபர் அ.ஸ்ரீகுமரனுடன் (மத்தி) காணப்படுகின்றனர்.

# ஜனாதிபதியின் உத்தரவுகளை மீறினால் புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்படும்

## லொத்தர் சபை குறித்து ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர்

கொழும்பு,மே23

ஜனாதிபதியின் உத்தரவுகளை அபிவிருத்தி லொத்தர் சபைத் தலைவர், பணிப்பாளர்கள் நிறைவேற்றாவிட்டால் புதிய பணிப்பாளர் சபையை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

அபிவிருத்தி லொத்தர் சபைக்கு ஜனாதிபதி இதுவரை விசேட உத்தரவுகள் எதனையும் விடுக்கவில்லை. அவ்வாறு ஜனாதிபதி உத்தரவு விடும் பட்சத்தில் அவற்றை லொத்தர் சபைத் தலைவர் பின்பற்றாவிட்டால் தலைவர் உட்பட பணிப்பாளர்களை மாற்றவேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் அந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுவது மக்கள் அறிந்து கொள்வதற்கேயாகும். வர்த்தமானி அறிவித்தல் வராவிட்டாலும் ஜனாதிபதியின் உத்தரவு செல்லுபடியாகும். வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு ஊடகத்துறை அமைச்சரிடம் ஜனாதிபதி கேட்டுள்ளார். எனினும் ஜனாதிபதியின் உத்தரவை அவர் மீறி வருகின்றார் எனவும் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

(ம)

# புலிகளின் இலச்சினையுடன் இலங்கையின் தேசியக்கொடி!

## அமெரிக்காவில் ஒளிபரப்பானதாம்

விடுதலைப் புலிகளின் இலச்சினை பொறித்த கொடி, இலங்கையின் தேசியக்கொடி என ஏ.பி.சி. தொலைக் காட்சியின் சன்பிரான்சிஸ்கோ நிலையத்தினால் கடந்த ஞாயிறன்று ஒளிபரப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

இதனைப்பார்த்த இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட அமெரிக்க பிரஜையொருவர் இது பற்றித் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அங்கு வாழும இலங்கையர் சமூகம் வாஷிங்ரனிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் முறைப்பாடொன்றைச் செய்துள்ளது. ஏ.பி.சீ.நிறுவனத்திடமும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் அமைப்பு இப்பொழுதும் அமெரிக்காவில் ஒரு தடைசெய்யப்பட்ட அமைப்பாகவே இருக்கிறது. அப்படியிருக்க, அவர்களின் இலச்சினை பொறித்த கொடி, இலங்கைக் கொடியாகச் சித்திரிக்கப்பட்டு ஒளிபரப்பப்பட்டுள்ளது. இதற்காக ஒளிபரப்பு நிலையம் தூதரகத்திடம் மன்னிப்புக் கோருவதுடன், இலங்கைத் தேசியக் கொடியுடன் குறித்த ஒளிபரப்பை மீண்டும் ஒளிபரப்பவேண்டும் என்று முறைப்பாட்டில் கேட்கப்பட்டுள்ளது.

(ம)

# 2 பெண் கிராம உத்தியோகத்தர்கள் மீது தென்னிலங்கையில் பாலியல் வல்லுறவு!

## கடற்படை அதிகாரி, பொலீஸ் கான்ஸ்டபிள் கைது

யாழ்ப்பாணம்,மே23

கடமை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த இரு பெண் கிராம சேவையாளர்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகக் கூறப்படும கடற்படை அதிகாரி ஒருவரையும் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரையும் கதறஸ் கொட்டுவப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

லொறி ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த சமயமே இவர்கள் இருவரும் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட பெண் உத்தியோகத்தர்கள் இருவரும் கதறஸ் கொட்டுவப் பொலீஸ் நிலையத்தில் முறைபபாடு செய்ததை அடுத்தே கடற்படை அதிகாரியும் பொலீஸாரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலன்னறுவை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் தி.ஜ. திலக்கசிறி தெரிவித்தார்.

(ம-ரி)

# வெள்ளத்தினால் துண்டிக்கப்பட்டு வாடும் தோட்டத் தொழிலாளர்கள்

கொழும்பு,மே23

கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் கிரிஎல்ல மடப்பத்த தோட்டம் ஏனைய பகுதிகளிலிருந்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. அங்கு வாழும் 60 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 500 தோட்டத் தொழிலாளர்கள் பட்டினியால் வாடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதால் நிவாரணப் பொருள்களை அங்கு எடுத்துச் செல்லமுடியாதநிலை நிலவுகிறது. இதனால் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட அனைவரும் உணவுப் பொருள்கள் கிடைக்காமல் தவிக்கின்றனர். குழந்தைகளுக்கான பாலுணவும், குடிதண்ணீரும் கூட கிடைக்கவில்லை.

கஷ்டப்படும் இந்த குடும்பங்களுக்கு ஹெலிகொப்டர் மூலம் உணவுப் பொருள்களை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படுவதாக சப்ரகமுவ மாகாண பிரதித் தலைவர் கணபதி இராமச்சந்திரன் நேற்றுக் கூறினார்.

(ம)

# அரசு நிறுவனங்கள் குறித்து ஆராய 20 நாடாளுமன்ற அதிகாரக் குழுக்கள்

## கட்சித் தலைவர்கள் இணக்கம்

கொழும்பு,மே23

அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை ஆராய 20 நாடாளுமன்ற அதிகாரக்குழுக்களை நியமிக்க கட்சித் தலைவர்கள் அதிகார பூர்வமாக இணக்கம் தெரிவித்திருக்கின்றனர். அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் உட்பட சகல அரசாங்க நிறுவனங்களும் இவற்றில் உள்ளடங்கும்.

இக்குழுக்களின் தலைவர்கள் பதவிகள் யாவும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே வழங்கப்படும்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் வெளிப்படையானவையாக அமைய வேண்டும் என்பதற்காக இக்குழுக்கள் அமைக்கப்படும் யோசனையை பிரதமர் முன்னர் தெரிவித்திருந்தார்.

இந்த யோசனைப்படியே, நாடாளுமன்ற அதிகாரக்குழுக்களை நியமிப்பதற்கான இணக்கத்தை கட்சித் தலைவர்கள் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடத்திய விசேட கூட்டத்தில் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற அதிகாரக்குழுக்கள முறையை அரசமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவராமலேயே நடைமுறைப்படுத்த நாடாளுமன்ற நிலையியற் கட்டளையைத் திருத்துவதென்வும அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இக்குழுக்கள் தொடர்பான சகல ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்வதற்காக எதிர்வரும் ஜூன் 4ஆம் திகதி மீண்டும் கூடுவதென்வும் தீர்மானிக்கப்பட்டது.

## கைதடி சிறுவர் இல்ல விவகாரம்:

# சக்திகிரீவனுக்கும் ஏனைய இருவருக்கும் நேற்றுப் பிணை

யாழ்ப்பாணம்,மே23

கைதடி சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருநத இந்து சமயப் பேரவைச் செயலாளர் சிவப்பிரகாசம் சக்திகிரீவன் மற்றும் இரு பணியாளர்கள் நேற்றுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனா. முதலாவது சந்தேக நபரின் பிணைமனு நிராகரிககப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

நான்காவது சந்தேக நபரான சக்திகிரீவன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என். சிறீகாந்தா, சந்தேக நபரைப் பிணையில் அனுமதிக்குமாறு கோரித் தமது வாதங்களை முன்வைத்தார்.

அந்த வாதங்களை ஏற்றுக்கொண்ட நீதிவான், முன்னர் சக்திகிரீவனுக்கு வழங்கப்பட்ட பிணைகளுக்கு மேலதிகமாக 25 ஆயிரம் ரூபா பெறுமதிக்கு ஆள் பிணை ஒன்றைச் சமர்ப்பித்து அவரைப் பிணையில் செல்ல உத்தரவிட்டார்.

முதலாவது, மூன்றாவது ஞாயிற்றுக் கிழமைகளில் சாவகச்சேரி பொலீஸ நிலையத்தில் அவர் கையொப்பம் இட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

ஏனைய மூன்று சந்தேகநபர்கள சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். சபாநாதன் அவர்கள் மூவரையும் பிணையில் விடுமாறு கோரினார்.

அவர்களில் இருவரான இல்லப் பணியாளர்கள் பேரானந்தம் மங்களேஸ்வரி, மகாலிங்கம் மனோன்மணி ஆகிய இருவரையும் 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் இரு ஆள்பிணையிலும் செல்ல நீதிவான் அனுமதி அளித்தார்.

சிறுவர் இல்லத்தில் இரண்டு சிறுமிகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கை மூலம் தெரியவந்துள்ளதால் முதலாவது சந்தேகநபரான வைத்திலிங்கம் தர்மராஜதுரை என்பவருக்கு பிணை வழங்குவதை பொலீஸார் ஆட்சேபித்தனர். இதனால் அவரது பிணை நிராகரிக்கப்பட்டது.

(ம-3-8-31-117)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,மே23

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், பழைய பூங்கா சீன உணவகம் மற்றும் குமாரசாமி புடைவையகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட சமுதாய மருத்துவத்துறை மாணவர்கள் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை மூளாய் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்த உள்ளனர்.

இந்த முகாமில் உடுகம்புலம் மற்றும் வேரகம் ஆகிய முகாம்களைச் சேர்ந்த மக்களுக்கு குருதிச் சோகை ,சிரங்கு,தோல் நோய்கள், குடற் புழுக்கள்,ஊட்டக் குறைவு, கல்சியம் குறைபாடு, உயர்குருதி அழுத்தம், சலரோகம் ஆகிய நோயகளுக்கான இலவச வைத்திய பரிசோதனைகள் வழங்கப்படும்.

சிரங்கு நோய் உடையவர்களுக்கு இலவசமாக சவர்க்காரக் கட்டிகளும் வழங்கப்படவுள்ளன.

(ம-6)

# புலிகளின் நிலைப்பாடு தொடர்பாக தமிழ்ச்செல்வன் அளித்த விளக்கம்

**கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அவர் அளித்த பதில்களும் இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன.**

*கேள்வி:-* சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலைக்குத் தீர்வு ஏற்படுமா?

*பதில்:* எமது நிலைப்பாட்டை விளக்கி, அனுசரணையாளரான நோர்வே தரப்புக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளோம். அக்கடிதம் தொடர்பாக விளக்கமளிக்கவே இன்றைய செய்தியாளர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 14 மாதங்களாக ஆறு சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. இந்தப் பேச்சுக்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மக்கள் மத்தியில் சென்ற போது அவர்கள் பெரிதாக எதிர்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும் இருந்தனர். மக்களின் தொடர்ச்சியான எதிர்பார்ப்புக்கள் எதுவும் நிறைவேறவில்லை அவர்கள் மத்தியில் நம்பிக்கையீனமும் ஏமாற்றமும் விரக்தியுமே ஏற்பட்டுள்ளன. இந்த நிலையில் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப சில முடிவுகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது.

சமாதான முன்னெடுப்புகளில் முதன்மையானதும் அடிப்படையானதுமான விடயம் யுத்தத்தால் நீண்டகாலம் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வு நிலையைச் சீர்படுத்துவதாகும். இராணுவ நெருக்குவாரங்களை நீக்கி, எமது பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியமர்ந்து இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதுதான் முதல் நோக்கமாக இருந்தது.

இந்த அடிப்படை நோக்கத்தில் இருதரப்புகளும் ஏற்கனவே இணக்கப்பாடு கண்டிருந்தன. அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில்தான் யுத்த நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. இயல்பு நிலையை ஏற்படுத்துவது தொடர்பான வரையறைகள் இந்த உடன்பாட்டில் தெளிவாக்கப்பட்டுள்ளன.

இந்த உடன்பாட்டில் மக்கள் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் வைத்திருந்தார்கள். ஆனால், அது முறைப்படி நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனால், மக்கள் மத்தியில் நம்பிக்கையீனம் தற்சமயம் ஏற்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையில் மக்களை நாம் பங்காளிகளாக்கிக்கொண்டு, சமாதான முன்னெடுப்புக்களை முன்னகர்த்திச் செல்வதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இதனாலேயே இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கால அவகாசம் ஒன்றை வழங்கும் நோக்கத்துடன் பேச்சுக்களை நாம் தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தோம்.

ஜப்பானில் நடக்கவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு பற்றியும் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. இதில் விடுதலைப் புலிகளைப் பங்குபற்றச் செய்வதற்குப் பல வழிகளிலும் சர்வதேச சமூகம் ஆர்வமும் முயற்சியும் மேற்கொண்டுள்ளதை நாம் பாராட்டுகின்றோம்.

அதேவேளை இந்த மாநாட்டில் தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக நாம் கலந்துகொள்வதற்கு எமக்கு ஏற்ற அங்கீகாரமும் அதற்கான சூழ்நிலையையும் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கு சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முடக்கநிலை, மற்றும் நம்பிக்கையீனங்கள் அகற்றப்பட வேண்டும். பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய வகையில் சமாதான முன்னெடுப்புக்களை உறுதியாக மேற்கொள்ள எமது தலைமை மிகுந்த ஆர்வத்துடன் இருக்கின்றது.

இந்த அடிப்படையிலேதான் ஜப்பானின் விசேட தூதரையும் நோர்வே வெளி விவகார அமைச்சரையும் எமது தேசியத் தலைவர் சந்தித்தார். சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முடக்க நிலையையும், எதிர்காலத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க செயற்படுத் தப்படவேண்டிய ஆலோசனைகளையும் தலைவர் அவர்களிடம் விளக்கியிருந்தார்.

மக்களின் மீள்குடியமர்வு, இயல்பு வாழ்க்கை ஆகியவற்றுக்காக உப குழு ஒன்றை உருவாக்கியிருந்தோம். குறுகிய கால ஏற்பாடாக அவசர புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக இது உருவாக்கப்பட்டது. இரு தரப்பின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டது இந்த அமைப்பு. ஆனால், இது சரியாக செயற்பட முடியாத சூழ்நிலையே - நான்கு தடவைகள் இக்குழு கூடி ஆராய்ந்த போதும் - காணப்பட்டது.

அவசர தேவையை உணர்ந்து சர்வதேச சமூகம், இந்த அமைப்பு மூலம் பல உதவிகளைச் செய்ய முன்வந்தது. ஒஸ்லோவில் நடந்த உதவி வழங்கும் மாநாடு ஊடாக சர்வதேச சமூகம் அந்த உதவிகளை வழங்க முன் வந்தது. ஆனால், அந்த உதவிகளை நடைமுறைப்படுத்த முடியவில்லை. இந்த அமைப்பு செயற்திறன் அற்றதாக - செயற்பாடில்லாத தன்மையைக் கொண்டிருந்ததாக - இருந்ததே அதற்கு காரணம். இந்த நிலையில் புதிய வடிவங்களை, புதிய ஏற்பாடுகளை செய்யவேண்டிய - ஆலோசிக்க வேண்டிய - நிர்ப்பந்தம் தமிழ்மக்கள் சார்பாக எமக்கு ஏற்பட்டுள்ளது.

நீண்ட பல தசாப்தங்களாக யுத்தத்துக்கு எமது மக்கள் முகம் கொடுத்துள்ளனர். அவர்கள் அடிப்படை கட்டுமானங்களை முற்றாக இழந்து பெரியதொரு மனிதாபிமான வாழ்வியல் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். அந்த வகையில் எமது மக்களுக்கு நிவாரணமும் தீர்வும் அவசரமாகத் தேவைப்படுகின்றன.

ஆகவே, எமது மக்கள் சார்பாக, புதிய நிலைப்பாடுகளையும் நடைமுறைச் சாத்தியமான தீர்மானங்களையும் எடுத்து சமாதான முன்னெடுப்புகளை நகர்த்த வேண்டும் என்பதே எமது தலைமையின் விருப்பமாகும். இந்த அடிப்படையிலேயே எமது ஆலோசனைகளையும் தீர்மானங்களையும் தற்சமயம் வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

சர்வதேச சமூகம் இன்று இரு தரப்பினரும் இணக்கப்பாடுகளின் மத்தியில் இணைந்து சமாதான முன்னெடுப்புக்களை வெற்றிகரமாக மேற்கொள்ளவேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளன. அதனைப் பாராட்டுகிறோம். அதேவேளை, எமது நடைமுறைச் சாத்தியமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் சர்வதேச சமூகம் உறுதுணை புரிய வேண்டும் இதுவே எமது எதிர்பார்ப்பாகும்.

ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் மாநாட்டில் யுத்தத்தால் அழிந்து போயுள்ள வடக்கு-கிழக்கு பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேச சமூகம் உதவிகளை வழங்கும். அவற்றை சரியான முறையில் கொண்டு செலுத்தக்கூடிய முடிவு எடுக்கும் அதிகாரமும் நடைமுறைப்படுத்தும் அதிகாரமும் உள்ள இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதே சாலப் பொருத்தமானது. இந்த எண்ணம் எமது மக்கள் மனதிலும் ஏற்பட்டிருக்கின்றது.

அந்த அடிப்படையிலேயே எமது தலைமை இந்தப் பரிந்துரையை அரசிடம் சமர்ப்பித்துள்ளது. பிரதமரிடம் இதற்கு ஆக்கபூர்வமான - உறுதியான பதிலை எதிர்பார்த்திருக்கின்றோம்.

*கேள்வி:-* தாங்கள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகம் அரசமைப்புக்கு உட்பட்டதா?

## இடைக்கால நிர்வாகம்

*பதில்:-* இலங்கை அரசமைப்பு, தமிழ்மக்களின் பங்களிப்புமின்றி உருவாக்கப்பட்டது. இந்த அரசமைப்புத்தான் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு காரணமாக அமைந்தது. இந்த அரசமைப்பினால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட வெறுப்பும் விரக்தியுமே உரிமைக்கான போராட்டமாக வளர்ச்சியடைந்தது என்பது வரலாறாகும்.

இந்த அரசமைப்பு மாற்றப்பட்டு அதனைத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளகின்ற சூழ்நிலை ஏற்படும் வரை இந்த அரசமைப்புக்கு உட்பட்டு எந்த ஒரு தீர்வையும் நிச்சயமாக அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் இதனை அரசுத்தரப்பும் சர்வதேச சமூகமும் புரிந்துகொண்டிருக்கும் எனக் கருதுகிறேன்.

*கேள்வி:* வாஷிங்டன் மாநாட்டிற்கு அழைக்காததால் கோபம் கொண்டு, ஜப்பான் மாநாட்டை நீங்கள் பகிஷ்கரிப்பதால் தமிழ்மக்களுக்கு கிடைக்க வேண்டிய நிதி கிடைக்காமல் போகும் அல்லவா?

*பதில்:* நீங்கள் கருதுவது தவறு. வாஷிங்டன் முன்னேற்பாட்டு மாநாடு தொடர்பாக எமது நிலைப்பாட்டை தெளிவாகக் கூறியிருந்தோம். நாம் எமது கோரிக்கையை அப்போதே தெரிவித்திருந்தோம. ஆனால், அரசு காலத்தை இழுத்தடித்து வந்ததுதான் இன்றைய நெருக்கடிக்குக் காரணம் தமிழ்மக்களின் எதிர்பார்ப்புகளையும் அவர்களின் நலன்களையும் நிறைவேற்றுவதற்கான ஒரு உறுதிப்பாடு கிடைக்குமாகவிருந்தால் - இலங்கை அரசு உறுதிமொழி களைத்தந்து நிலைமையை சீராக்குமாயிருந்தால் - நிச்சயமாக புலிகள் தமிழ்மக்களின் எதிர்கால நலன் சார்பாக, அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டக் கூடிய வகையில் மாநாட்டில் கலந்துகொள்வதில் எந்தவித சிக்கலும் இருக்காது. மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும்



என்ற நோக்கம் எமக்கு இல்லை. எமது மக்களுக்கு நன்மை அளிக்கக கூடிய வகையில் எங்களது பங்களிப்பு இருக்க வேண்டும் என்பது தான் இன்றைய பிரச்சினைக்கு காரணம்.

*கேள்வி:-* இடைக்கால நிர்வாகம் பற்றி முன்னர் பேசப்பட்டது. பேச்சுக்கள் ஆரம்பமானதும் இடைக்கால நிர்வாகக் கோரிக்கை கைவிடப்பட்டது. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி, நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய இடைக்கால நிர்வாக சபை பற்றி இப்போது ஏன் கேட்கிறீர்கள்?

*பதில்:-* இடைக்கால நிர்வாகக் கோரிக்கை எம்மால் கைவிடப்பட்டது என்பது தவறான கருத்தாகும். கடந்த தேர்தல் பிரச்சாரக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாக மக்களிடம் இந்த இடைக்கால நிர்வாக சபை குறித்துத் தெரிவித்தே வாக்குக் கேட்டார். பெரும்பான்மையான மக்கள் அதற்கு வாக்களித்தனர். இடைக்கால நிர்வாகம் ஏற்பட வேண்டும் என்ற தேவையை பெரும்பாலான மக்கள் ஏற்றுள்ளார்கள்.

ஆரம்பத்தில், பேச்சுக்களில் நெருக்கடி நிலை தோன்றக் கூடாது என்பதற்காக - குறுகியகால ஏற்பாடாக - இரு தரப்பினரும் இணைந்து அவசர மனிதாபிமானத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடிவு செய்தோம். தொடர்ந்து இந்த இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக முடிவு எடுப்பதற்கும் இணங்கியிருந்தோம். இதற்காக ஏற்படுத்தப்பட்ட வரைவில் இதனை தெளிவாகக் கூறியிருந்தோம். 'சிரான்' உபகுழு குறுகிய காலத்துக்கே ஏற்படுத்தப்பட்டது. எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படும் நிர்வாக அலகுக்கு இந்த உப-குழு இடையூறாக இருக்காது என்றும் இணங்கியிருந்தோம்.

துரதிர்ஷ்ட வசமாக அந்த உப-குழு இயங்காததால் இந்த இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஜப்பான் மாநாடு பெருமளவு நிதியினை புனர்வாழ்வுப் பணிக்கு வழங்கப் போகின்றது. அந்த நிதியைக் கையாளக் கூடிய அதிகாரம் உள்ள ஒழுங்கமைப்பு இல்லாமல், மாநாட்டில் கலந்துகொள்ள முடியாது. இந்தச் சூழ்நிலையில் இடைக்கால நிர்வாகத்தை வலியுறுத்த வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

இடைக்கால நிர்வாக விடயத்தை நாம் கைவிடவில்லை. இலங்கை அரசமைப்புக்கு உட்பட்டு நடக்க வேண்டுமாயிருந்தால், எந்தக் காரியமும் நடக்காது. யுத்தநிறுத்த உடன்படிக்கையோ சமாதான முன்னெடுப்புக்களோ அரசமைப்பை முற்றாக நிராகரித்த வடிவத்திலேயே உள்ளன. ஆகவே, அரசமைப்புக்கு வெளியில் நின்றுதான எதையும் பார்க்க வேண்டும். இதனை எல்லாத் தரப்பு ...ளும் சிந்தித்தால் தான் தீர்வும் ச... தானமும் சாத்தியமாகும்.

*கேள்வி:-* ஜப்பான் மாநாட்டில் புலிகள் பங்குபற்ற வேண்டும் என்று சர்வதேச சமூகம் கோருகின்றது. உங்கள் நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளாத காரணத்தால் தான் இப்படிக் கூறுகின்றதா?

*பதில்:-* எமது நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்துக்கு விளக்கி வருகின்றோம். தமிழ் அமைப்பினர், கூட்டமைப்பினர் உட்பட தமிழ்மக்கள் சார்பாக குரல் கொடுக்கும் அனைவரும் எமது நிலைப்பாட்டை வலியுறுத்துகின்றார்கள். சர்வதேச சமூகம், மனிதாபிமான நோக்கத்தோடு எமது மக்களின் நீண்டகால உரிமை மறுப்பையும் விளங்கிக்கொண்டு, அவர்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் சிந்திக்கின்ற காலம் வந்துள்ளது.

*கேள்வி:-* ஜப்பான் மாநாட்டுக்குப் புறம்பாக, சமாதானப் பேச்சுக்களில் பங்குகொள்வது பற்றி என்ன நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கிறீர்கள்?

*பதில்:-* எமது பரிந்துரைகளையும ஆலோசனைகளையும் பிரதமரிடம் முன்வைத்திருக்கின்றோம். ஆக்கபூர்வமான பதில் கிடைக்கும் நிலையில் இது குறித்து பரிசீலனை செய்வோம்.

## போர் ஆரம்பிக்குமா?

*கேள்வி:-* அரசு காலத்தை இழுத்தடித்தால் சமாதான முயற்சியை தொடர்வீர்களா? விடுதலைக்கான போரை ஆரம்பிப்பீர்களா?

*பதில்:-* யுத்தம் மூலம் தீர்வை எட்டுவதை விட, சமாதான வழியில் நாகரிகமான முறையில் இணக்கப்பாட்டுடன் தீர்வு ஏற்படுவதைத்தான் தொடர்ந்தும் எமது தலைமை விரும்புகின்றது. அப்படியான ஒரு நிலைமையை தோற்றுவிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்து இழுத்தடிப்புச் செய்யாமல உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதே எமது இன்றைய எதிர்பார்ப்பு ஆகும்.

*கேள்வி:-* ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்ட எந்தவொரு அரசும், அரசமைப்புக்கு வெளியே இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தும் என நீங்கள் நம்புகிறீர்களா?

*பதில்:-* இலங்கையின் அரசமைப்பு முழுக்க முழுக்க சிங்கள மொழி பேசுகின்ற, சிங்கள பெரும்பான்மைப் பலம் கொண்ட நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்டது. தமிழ்மக்களின் அங்கீகாரமோ, பிரதிநிதித்துவமோ அதற்கு இருக்கவில்லை. இந்த அரசமைப்பு தமிழ்மக்களுக்கு அநீதி இழைக்கின்றது. அந்தவகையில்தான் தமிழ்மக்கள் இந்த அரசமைப்பை நிராகரித்து உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தவகையில் தமக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகள் காரணமாக தமிழ்மக்கள் இந்த அரசமைப்புக்கு இணங்கப் போவதில்லை இது யதார்த்தபூர்வமானது.

ஆகவே, இந்த நிலைப்பாட்டிற்கு வெளியில் சிந்திக்க வேண்டிய தேவையிருந்தது. அதனால்தான் இரு தரப்புக்களும் வெளிநாட்டு அனுசரணையை ஏற்றுக்கொண்டன.

*கேள்வி:-* தற்போதுள்ள உள்ளூராட்சி அமைப்புகளுக்கு பலம் இல்லையானால், தேர்தல் மூலம் பலம் உள்ள அமைப்பை நீங்கள் உருவாக்கலாம் அல்லவா?

*பதில்:-* உள்ளூராட்சி அமைப்புக்கள், மாகாண சபைகள், போன்றவை அதிகாரம் அற்றவைகளாகவே உள்ளன. பாரியளவு நிதியைக் கையாளும் அந்த அமைப்புகளுக்கு இல்லை.

அத்துடன் தேர்தல் ஒன்றில் போட்டியிட்டு நாம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை இலங்கை அரசமைப்பு ஏற்றுக்கொள்ளாது என்றுதான் நினைக்கிறேன். ஏனெனில், அரசமைப்பில் இன்னமும் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படும் பல சரத்துக்கள் மிக இறுக்கமாகவும் ஆணித்தரமாகவும் இருக்கின்றன. அதனால், இங்கு தமிழ் மக்களின் நன்மை கருதி ஒரு அரசமைப்பு வடிவம் ஏற்படுகின்ற போது தான் - உறுதியான ஸ்திரமான ஒரு அரசியல் தீர்வின் அடிப்படையில் தான் - தேர்தலில் தமிழ்மக்கள் சார்பாக விடு தலைப் புலிகள் பங்குபற்றும் சூழ்நிலை உருவாகும்.

பல லட்சம் தமிழ்மக்கள் யுத்தம் காரணமாக தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் இடம்பெயர்ந்த நிலையில் அவர்கள் உள்ளனர். இங்கு அரசியல ஸ்திரத்தன்மையும் அரசியல் தீர்வும் ஏற்பட்டு சமூக நிலை உருவாகும் போதுதான் தேர்தல் என்பது அர்த்தமுள்ளதாக அமையும். இல்லாவிட்டால் அர்த்தமற்ற ஒன்றாகத் தான் தேர்தலை நாம் கருதுகிறோம்.

## ஜப்பான் மாநாடு

*கேள்வி:-* ஜப்பான் மாநாட்டில் பங்குபற்றாவிட்டால், உங்கள் நிலைப்பாட்டை எப்படி சர்வதேச சமூகத்துக்கு கூறுவீர்கள்?

*பதில்:-* ஜப்பானில் நடக்கப் போகும் மாநாட்டில் சரியான உறுதிப்பாடான செய்தியை கொடுப்பதுதான் பொருத்தம் எனக் கருதுகின்றோம். இருதரப்பும் இணக்கப்பாடு கண்டு, திருப்தியடைந்து மாநாட்டில் கலந்து கொள்வதன் மூலமே சர்வதேச சமூகம் சமாதான முன்னெடுப்பில் நம்பிக்கை கொள்ளும் நிலை உருவாகும்.

விடுதலைப் புலிகள் அந்த மாநாட்டில் பங்குபற்றக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் தமிழ்மக்களின் நலன்களை முதன்மைப்படுத்துகின்ற அல்லது அவர்களின் தேவைகளை உறுதி செய்கின்ற சூழ்நிலை ஏற்படுத்தப்படவில்லை என்ற செய்தியைத்தான் அந்த மாநாடு தெரிவிக்கும். எமது மக்களின் நம்பிக்கைகளைக் கட்டி எழுப்ப வேண்டுமாயின், புலிகளையும் மாநாட்டில் பங்கேற்கச் செய்வதுதான் பொருத்தமாகும். அப்படியான சூழ்நிலையை ஸ்ரீலங்கா அரசு ஏற்படுத்த வேண்டும் அப்போதுதான் சர்வதேச சமூகத்தின் கவனம் இலங்கைத் தீவின் மீது விழும். இல்லாவிட்டால் சாதாரணமான உதவி வழங்கும் மாநாடு போல்தான் அது அமையும் எனக் கருதுகின்றேன்.

*கேள்வி:-* இடைக்கால நிர்வாகம் தொடர்பான உறுதிப்பாட்டையா, அதன் செயற்பாட்டையா நீங்கள் விரும்புகிறீர்கள்?

*பதில்:-* ஆக்கபூர்வமான பதிலைத் தான் நாம் எதிர்பார்க்கிறோம். நாம் ஏமாற்றப்பட முடியாதபடி, சரியான தீர்வு கிட்டக்கூடிய, நம்பகத் தன்மையை ஏற்படுத்தக்கூடிய வழிமுறையையே பிரதமர் கையாள்வார் என நம்புகிறோம். இந்தப் பிரச்சினைக்கு நோர்வே அனுசரணை ஊடாக பிரதமர் தரும் உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே எமது முடிவுகளை மீள்பரிசீலனை செய்வோம். அரசின் தனிப்பட்ட உத்தரவாதம், உறுதி மொழியை நம்பி நாம் எதையும் செய்யமுடியாது. ஆகவே, நடைமுறைச் சாத்தியமான அங்கீகரிக்கப்பட்ட உறுதிப்பாடாக அது இருக்க வேண்டும்.

*கேள்வி:-* இராணுவப் புலனாய்வாளர்கள் சுட்டுக்கொல்லப்படுவது தொடர்பாக தங்கள் அமைப்பு மீது குற்றஞ் சாட்டப்படுகின்றது. அது உண்மையா?

*பதில்:-* புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் எமது போராளிகள் எவரிடமும் ஆயுதங்கள் இல்லை. அவர்கள் ஆயுதங்கள் இன்றியே இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு போகிறார்கள். அந்தப் பகுதிகளில் இடம்பெறும் சம்பவங்களுக்கும் எமது அமைப்புக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை. எம்மீது தென் இலங்கை ஊடகங்கள் வீணாகப் பழிபோடுகின்றன என்று தெரிவித்தார் தமிழ்ச்செல்வன். (ஒ-3)

## வருடாந்த பொதுக் கூட்டம்- 2003

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை (2003-05-24) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற வுள்ளது. அனைத்து அங்கத்தவரையும், புதிய அங்கத்த வரையும் அன்றையதினம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/ஆ.ந.இ.வித்தியாலயம்.

(18225)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**


Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.-021-222-2567

(சி-27865)


## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
12 - 10 - 1986



மறைவு
23 - 05 - 1998

### தூ.போல் கஜேந்திரன்

(ஆண்டு 7, பரி.யோவான் கல்லூரி மாணவன்)

ஆறுமோ எம் மனம் ஆண்டைந்து சென்றாலும்
மாறுமோ மனக்கவலை மானுடம் உள்ளவரை
தேற்றுவீர் எமையெனத் தெம்புடன் நாமிருக்க
தேய்பிறைபோல் ஓடி மறைந்ததெங்கே கஜேந்திரனே!

வே.தூயகுமாரன் (தந்தை)
இல. 28/3, திருமகள் வீதி,
அரியாலை மத்தி, யாழ்ப்பாணம்.

என்றும் உன் பிரிவால் வாடும்:
அம்மா, அப்பா, தங்கை,
தம்பிமார்.

(18283)

## 2ஆம் வருட நினைவலைகள்

மலர்வு
04 - 01 - 1936



உதிர்வு
02 - 05 - 2001

### திருமதி இராசரத்தினம் பாக்கியம்

திதி: 22-04-2003

எனது அன்புத் தெய்வமே!
என்றும் உங்கள் நினைவுடன்...

எழுதுமட்டுவாழ் தெற்கு.

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர் இராசரத்தினம்.

(18258)

## 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு
19 - 01 - 1925



உதிர்வு
23 - 04 - 2003

### திருமதி தோமஸ் விறிசித்தம்மா

நல்வழி வாழ்ந்து வழிகாட்டிய அன்னையே!
அமைதியுடன் பழகிக்கொண்ட அத்தையே!
அன்புக்கரம் நீட்டிய எங்கள் பாட்டியே!
பொறுமையுடன் அரவணைத்த எங்கள் பூட்டியே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து
என்றும் உங்கள் நினைவில் வாழும்.......

16/1, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(18274)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## பிரதமர் கோரிக்கை

கொழும்பு,மே23

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக் கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டி யெழுப்புவதற்கு சர்வதேச சமூகம் உதவி வழங்கவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் உள்ள வெளி நாட்டு தூதுவர்களை அழைத்து நேற்றுமுன்தினம் அலரிமாளிகை யில் பிரதமர் நடத்திய மாநாட்டி லேயே இந்தக் கோரிக்கை விடுக் கப்பட்டது.

இம்மாநாட்டில் 60 இற்கு மேற்பட்ட நாடுகளின் தூதுவர்கள் கலந்துகொண டார்கள். அமைச்சர்களான மிலிந்த மொறகொட, கருஜயசூரிய, ஜோன் அமரதுங்க மற்றும் ரவீந்திர சமரவீர ஆகியோரும் இதில் கலந்துகொண் டிருந்தனர். (ஒ-4)

## சிறுமி மர்மமரணம்: சான்றுப் பொருள்கள் பகுப்பாய்வுக்கு!

யாழ்ப்பாணம்,மே23

மிருசுவிலில் கடந்த 8ஆம் திகதி தூக்கில் தொங்கியநிலையில் மீட் கப்பட்ட சிறுமியின் மர்மமரணம் தொடர்பாக அங்கு மீட்கப்பட்ட சான் றுப் பொருள்களை இரசாயனப் பகுப் பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பு மாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த மரணம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சிறுமியின் சிறிய தந்தையாரான க.மெய்கண்டதேவர் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

அவரைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட சாவகச்சேரி நீதிவான், சான்றுப் பொருள்களை கொழும்புக்கு அனுப்பு மாறும் கொடிகாமம் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி குமாரதாஸவுக்கு பணிப்புரை விடுத்தார். (எ-4)

## ஆலயம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மே23

புன்னாலைக்கட்டுவன் வடக்கு துர்க்கையம்பாள் (குளத்தடி நாச்சிமார்) ஆலய புனருத்தாரண வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இம்மாத இறுதியில் மஹா கும் பாபிஷேகம் இடம்பெறும். (எ-69)

## வரணிச் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு

வரணி,மே23

வரணி பொதுச்சந்தையில் பொது மக்களின் வசதி கருதி அமைக்கப்பட்ட கழிப்பறைகளில் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகக் கூறப்படுகிறது. கழிப் பறைக்கான தண்ணீர்த் தொட்டியில் தேவையான நீரை நிரப்புவதிலுள்ள அசமந்தப்போக்கே இதற்குக் கார ணமெனச் சுட்டிக்காட்டப்படுகிறது. இத னால் பொதுமக்கள் பல அசௌகரியங் களை எதிர்நோக்குகின்றனர்.

அதேவேளை - கழிப்பறைகளை பாவிப்பவர்களும் சுகாதாரம் பேணும் விதத்தில் நடக்கவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-170)

## இணுவில் கலாஜோதி சம்பியன்

வலி.வடக்கு,மே23

இணுவில் அண்ணா விளையாட் டுக் கழகம் நடத்திய தாச்சி சுற்றுப் போட்டியில் இவ்வாண்டுக்கான சம்பி யன் கிண்ணத்தை இணுவில் கலா ஜோதி விளையாட்டுக்கழகம் பெற் றுக்கொண்டது.

யாழ் மாவட்டத்தில் தாச்சி சங்கத் தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்திய தாச்சி சுற்றுப்போட்டி இறுதி யாட்டத்தில் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகமும் உடுவில் சங்குவேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதின.

போட்டி ஆரம்பமான நேரம் முதல் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப் பாக விளையாடின. இரு அணிகளும் மாறி மாறி இரு பழங்களைப் பெற்றுக் கொண்ட நிலையில், கலாஜோதி விளையாட்டுக் கழக இளம் வீரர்கள் திடீரென தமது விளையாட்டு வடி வத்தை மாற்றி மேலும் தொடர்ந்து மூன்று பழங்களைப் பெற்ற நிலை யில் 5இற்கு 2 என்ற கணக்கில் முதல் பாதி ஆட்டம் முடிந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கியதும் ஐக்கிய விளையாட் டுக் கழகத்தின் பழம் பெறும் முயற்சி நிறைவேறவில்லை.

இதேநேரம், கலாஜோதி விளை யாட்டுக்கழகம் இரண்டாவது பாதி ஆட்டத்தில் மேலும் மூன்று பழங் களைப் பெற்று 8இற்கு 2 என்ற கணக் கில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வென்று சம்பியனாகியது. (ஒ-86)



மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை நடத்திய சிறுவர் சேமிப்புத்திட்ட சீட்டிழுப்பில் பரிசுபெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. அதில் பரிசுபெற்ற ஒருவருக்கு கிளை முகாமையாளர் ந.ஜெயரட்ணம் சைக்கிள் ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்: சண்டிலிப்பாய்ச் செய்தியாளர்)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

### செல்வி மலர்வண்ணன் ரம்மியா

இணுவில் மேற்கைச் சேர்ந்த
மலர்வண்ணன் ~ பாலதர்சினி
தம்பதிகளின்
செல்வப் புதல்வி
**ரம்மியா**



தனது முதலாவது பிறந்தநாளை இன்று (23.05.2003) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

செல்வி ரம்மியாவை அப்பா, அம்மா, பெரியம்மா, பெரியப்பா, பெரியமாமா, மாமி, சின்னமாமா, சித்தம்மாமார், அத்தை, சங்கர் மச்சான், மச்சாள், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சிறப்போடு வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

ச.பாலநந்தினி
(பெரியம்மா)

இணுவில் மேற்கு,
இணுவில்.

(18262)

## முதலாம் ஆண்டு நினைவு தினம்



### பிரம்மஸ்ரீ சேஷையர் திருஞானசம்பந்த சர்மா

சிராத்த திதி: வைகாசி மாத அபரபட்ச அட்டமி
(23-05-2003)

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்மிதயம்
ஈண்டு உம்மை நினைந்தே இவ்வுலகில் வாழுகின்றோம்.

மன்னார் வீதி,
பட்டாணிச்சூர்,
வவுனியா.

(18231)

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் மாணிக்கமாக
03 - 10 - 1930



விண்ணுள் தெய்வமாக
23 - 04 - 2003

### அமரர் வேலுப்பிள்ளை சபாபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் சுங்கத் திணைக்களம்)

பாசத்தின் பிணைப்புடனே பாரினிலே வாழ்ந்தீர்!
நேசத்துடன் எம்மை உலகில் அரவணைத்தே மகிழ்ந்தீர்!
உங்களது நினைவு மட்டும் எமது நெஞ்சைவிட்டு ஒருபோதும் அகலாது.
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.*

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் நேரில வந்து ஆறுதலும் தேறுதலுமளித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபந் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்.

இன்று (23.05.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டுக்கோட்டை.

மனைவி, மகன்
மருமகள், பேர்த்தி.

உதயன்

## பந்து அரசின் களத்தில்!

சமாதான முயற்சிகளில் முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டுள்ள தற்போதைய சூழலில் தங்களுடைய நிலைய விடுதலைப் புலிகள் மீண்டும் ஒரு தடவை தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள்.

நோர்வே அனுசரணையாளர் விடர் ஹெல்கிஸனுக்கு, புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நேற்றுமுன்தினம் அனுப்பிய கடிதத்தில் புலிகளின் நிலைப்பாடு வெட்ட வெளிச்சமாக்கப் பட்டிருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் விடயம் தொடர்பாகப் புலிகளின் மதியுரைஞர் அதில் சுட்டிக்காட்டியிருக்கும் யதார்த்த சூழ்நிலை நோக்குதற்குரியது.

"பூரணமாகப் புதியதோர் அரசியல் நிலையை ஏற்படுத்தும் ஓர் உயர் அரசமைப்பின் கீழ் மட்டுமே தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு சாத்தியமாகும். தற்போதைய ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலையில் அத்தகைய முயற்சி யதார்த்தமாகாது" - என்று மதியுரைஞர் பாலசிங்கம் விளக்கியிருப்பது நூற்றுக்கு நூறு உண்மை.

நாடாளுமன்றத்தில் சொற்ப பெரும்பான்மையுடன் 'தள்ளாடும்' அரசு, தாம் நினைத்த நேரத்தில் அரசைக் கலைப்பது உட்பட பல்வேறு நிறைவேற்று அதிகாரங்களுடன் அரசை ஆட்டுவிக்கும் - மற்றொரு கட்சியைச் சேர்ந்த - ஜனாதிபதி, தீவிரமடைந்து வரும் ஜே.வி.பி. போன்ற பேரினவாதிகளின் எதிர்ப்பு. அரசுக்குள் இருந்து கொண்டே ஆட்டம் காட்டும் சில அணிகள் - இப்படி வலுவற்ற ஒரு நிலையில் இருந்து கொண்டுதான் ஒருபுறம் ஆட்சியையும் மறுபுறம் சமாதான நடவடிக்கைகளையும் கொண்டு இழுக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இந்தப் பின்னணியில், நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் நிரந்தரமான - திட்டவட்டமான - இறுதித் தீர்வு காணும் முக்கிய தீர்மானங்களை எடுப்பதோ அவற்றை நடைமுறைப்படுத்துவதோ ரணிலின் அரசினால் இப்போதைக்கு இயலாதகாரியம்.

அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய அரசியல் சூழ்நிலை ஏற்படும் வரை - இறுதித்தீர்வுக்காக - காத்திருக்க வேண்டியிருக்கும்.

அந்தக்காலம் வரையான இடைக்கால ஏற்பாடுகள் குறித்தே விடுதலைப் புலிகள் இப்போது தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள்.

இறுதித் தீர்வைக் காண காலம் செல்லும். அதுவரை மக்களின் அன்றாட, அவசர, மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் பார்த்திருக்க முடியாது. அவற்றைத் தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - இதைத்தான் இந்த சமாதான முயற்சிகளின் ஆரம்பத்திலிருந்து இன்று வரை புலிகள் வலியுறுத்தி வந்தனர். இப்போதும் அதைத்தான் அவர்கள் பிரஸ்தாபித்திருக்கின்றார்கள்.

ஆரம்பம் தொட்டே புலிகளின் இந்தக் கருத்தை பேச்சு மேசையிலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வாயிலாகவும் கொள்கை அளவில் அரசுத் தரப்பு ஏற்றுக்கொண்டு வந்துள்ளது.

ஆனால், அந்த உடன்பாடுகளின் அடிப்படையில் விடயங்களைச் செயற்படுத்துவதில்தான் அரசு தொடர்ந்து தவறிழைத்து வருகிறது.

அந்தப் போக்கு சகிக்க முடியாத எல்லையைத் தாண்டிய போதுதான், சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவதைத் தற்காலிகமாக இடைநிறுத்தும் முடிவுக்கும், டோக்கியோவில் நடைபெறும் உதவும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்வதில்லை என்ற தீர்மானத்துக்கும் புலிகள் வந்தனர்.

புலிகளை மீண்டும் சமாதானப் பேச்சு மேசைக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கும் வரவழைப்பதற்கு இந்த விடயங்களில் ஏற்பட்டுள்ள குளறுபடிகள் நீக்கப்பட்டு, சீர்செய்யப்பட வேண்டும்.

மதியுரைஞர் பாலசிங்கத்தின் கடிதம், நிலைமையைச் சீர்செய்வதற்கு அரசுத் தரப்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை அரசுத் தரப்புக்கும், அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்புக்கும் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

பந்து இப்போது அரசின் பக்கத்தில்.

அரசு எப்படி விளையாடுகின்றது என்பதில் தான் அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் தங்கியிருக்கின்றன.

# மிதிவெடி அகற்றும்பணிகள் தாமதமடைய வரைபடங்கள் கிடைக்காமையும் காரணம்!

### செயற்பாட்டு அலுவலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே23

இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகளிடமிருந்து கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள இடங்கள் தொடர்பான வரைபடங்கள் கிடைக்கவில்லை. கண்ணிவெடிகளை அகற்றும் பணி தாமதமடைவதற்கு இதுவும் ஒரு பிரதான காரணமாகும். இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட மிதிவெடி அகற்றும் செயற்பாட்டு அலுவலக அலுவலர் எஸ்.பரராஜா.

யாழ். மாவட்டத்தில் மிதி வெடிகளை அகற்றும் செயற்பாடு தாமதமடைவதாக பொதுமக்கள் தரப்பிலிருந்து கருத்துத் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக கேட்கப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடிகள், வெடிக்காத [illegible] கள் ஆகியவை பெருமளவில் மீட்கப்படாது உள்ளன. மீள்குடியமர்வு நடவடிக்கைக்கு இவை முற்றாக அகற்றப்படுவது அவசியமாகும். ஆனால், ஆளணிப்பற்றாக்குறை காரணமாக மிதிவெடி அகற்றும் பணியை தீவிரப்படுத்த முடியாதுள்ளது.

காலநிலை சீரின்மையால் ஏற்பட்டுள்ள வரட்சி, இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புகளிடமிருந்த சரியான வரைபடங்கள் கிடைக்காமை போன்ற காரணங்களினாலும் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகளில் தாமதம் ஏற்படுகிறது.

பொதுமக்கள் அச்சத்தினால் மிதிவெடி இருப்பதாகத் தாம் சந்தேகிக்கும் இடங்கள் அனைத்தையுமே மிதிவெடி உள்ள இடங்களாக எமக்குத் தெரியப்படுத்தி விடுகின்றனர். அதனால் இங்கு மிதிவெடிகள் இல்லாதபோதும் சோதனை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதனால் வீணான கால தாமதம் தவிர்க்க முடியாததாகிறது.

இதேவேளை, மழை வெள்ளம் பாய்ந்தோடும்போது கண்ணிவெடிகள் இடம்மாறிவிடுகின்றன. அத்தகைய கண்ணிவெடிகளை தேடிக்கண்டு பிடிப்பது வெகுசிரமமாக உள்ளது.

ஆயினும், அவசர தேவையைக் கருத்திற்கொண்டு பாடசாலைகள், மருத்துவமனைகள் மீள்குடியமர்வு இடங்கள், விவசாய நிலங்கள் போன்றவற்றில் முன்னுரிமை அடிப்படையில் கண்ணிவெடியகற்றும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது - என்றார் அவர். (ஒ-ரி)

## உடுவில் கல்விக் கோட்டத்துக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

வலிகாமம் தெற்கு,மே23

உடுவில் கல்விக்கோட்டக் கல்விப் பணிப்பாளராக எஸ்.குபேரநாதன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இணுவில் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி வந்த எஸ்.குபேரநாதன் உடனடியாக செயற்படும்படியாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளராகச் செயற்பட்டு வந்த அ.தற்பரானந்தன் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இதுவரை காலமும் உதவிக் கல்விப்பணிப்பாளர் எவரும் நியமிக்கப்படாமையால் வலிகாமம் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தற்காலிகமாக இப்பணியை மேற்கொண்டு வந்தார். (ஒ-152)

## காணாமற்போனோர் குறித்த ஐந்தாம் கட்ட விசாரணைகள்

வடபகுதியில் கடந்த 1996 - 1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணமற் போனோர் தொடர்பான 5ஆம் கட்ட விசாரணைகள் எதிர்வரும் 30ஆம் திகதி முதல் 4தினங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

- மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவினரே இந்த விசாரணைகளை மேற்கொள்ள உள்ளனர். முன்னாள் அரச அதிபர் தேவநேசன் நேசையா தலைமையிலான இக் குழுவின் செயலாளராக இக்பால் பணியாற்றுகிறார். மேலும் இக் குழுவில் ஹமலஸ் பெர்னாண்டோ, இஸ்மாயில் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இக்குழு விசாரணைகளை மேற்கொள்வதற்காக யாழ். வர உள்ளது.

விசாரணைகள் எதிர்வரும் 30ஆம் திகதியும் அடுத்த மாதம் 2ஆம் திகதிகளிலும் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்திலும் -

எதிர்வரும் 31ஆம் திகதி மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்திலும் - நடைபெறவுள்ளன.

இவ்விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர்களுக்கு தனித்தனியாக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் -

இதுவரையில் விசாரணைகளுக்கு அழைக்கப்படாதவர்கள் கட்டம் கட்டமாக அழைக்கப்படுவார்கள் என்றும் - தெரிவிக்கப் பட்டது. (ஒ-5)

### முன்னுரிமை அடிப்படையில்

## பிறப்புச் சான்றிதழ்கள் வழங்க செயலகத்தில் புதிய நடைமுறை

கைதடி,மே23

யாழ்.செயலகத்திலுள்ள மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் பொது மக்களுக்கு அவசரத் தேவைகளுக்காக முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பத்திரங்கள் வழங்கும் பணிகள் தற்போது உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் பொதுமக்கள் தம் அவசர தேவைகளுக்காக மேலதிக மாவட்டப் பதிவாளரிடம் சென்று பத்திரங்கள் அவசரமாகத் தேவைப்படுவதற்கான காரணங்களைக் கூறி அவற்றை முன்னுரிமை அடிப்படையில் பெற்று வந்தனர்.

இந்தநிலையில், செயலகத்தில் செல்வாக்கு[illegible]ப சிலர் அவசர தேவை எனக்கூறி மேற்படி பத்திரங்களை பெறும் திட்டத்தை துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்ப[illegible]து.

இதனால், பொதுமக்கள் தமது அவசரத் தேவைக[illegible] பூர்த்தி செய்ய முடியாது ஏமாற்றமடைய நேரிட்டதாகத் தெரிவி[illegible]படு கிறது.

இது சம்பந்தமாக பொதுமக்கள் பலர் யாழ்.அரச அதிபரிடம் முறையீடு செய்தனர். இதனையடுத்து இப்பணிகள் யாவற்றையும் உடனடியாக நிறுத்துமாறு அரச அதிபரால் உத்தரவிடப்பட்டது.

மேலும் இப்பத்திரங்கள் அவசரமாகத் தேவைப்படுவோர் யாழ்.அரச அதிபரிடம் உரிய காரணத்தைக் கூறி மேற்படி பத்திரங்களைப் பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.செயலகத்திற்கு வரும் பொதுமக்கள் பலரை செயலகத்துக்கு முன்னால் நிற்கும் தரகர்கள் சிலர் இப்பத்திரங்களை விரைவில் பெற்றுத் தருவதற்குப் பேரம் பேசி வருவதனையும் அவதானிக்கமுடிகிறது.

### நாளை

வைகாசி 10
சனிக்கிழமை
24.05.2003
திதி : நவமி
நள்ளிரவு 12.01 வரை
நட்சத்திரம் : சதயம்
முற்பகல் 10.09 வரை
சுபநேரம் : 2.52 - 4.22
ராகுகாலம் : 8.52 -10.22
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

கோபத்தை அடக்கத் தெரிந்தவர்களே தமது கொடிய எதிரிகளை வெற்றி கொள்வார்கள்.

## கிளிநொச்சியை நவீன நகராக மாற்றும் நடவடிக்கை ஆரம்பம்

கிளிநொச்சி,மே23

கிளிநொச்சியை நவீன வசதிகள் கொண்ட நகராக மாற்றுவதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் முதற் கட்டமாக நவீன வசதிகளையுடைய பாரிய சந்தை ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த திங்கட்கிழமை காலை கிளிநொச்சி அம்பன் குளத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம், கரச்சி பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன், கிளிநொச்சி காவல் பணிமனைப் பொறுப்பாளர் ரஞ்சித்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி நவீன நகராக மாற்றப்படும் கட்டத்தில் விவேகானந்தநகர், பாரதிபுரம், மலையாளபுரம், கிருஸ்ணபுரம், பொன் நகர் என்பன அதன் உபநகர்களாக மாற்றப்படவுள்ளன.

இதேவேளை, முருகண்டி - அக்கராயன் சாலையில் உள்ள பொன்நகரில் இருந்து பரந்தன் - பூநகரி சாலை வரை 35 அடி அகலத்தில் பாரிய வீதி ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. இதற்காக இப்பகுதியில் நிலம் சுவீகரிக்கப்படவுள்ளது. (ஒ-8)

### கடும் காற்றில் சேதமடைந்த

## வாழைத் தோட்டங்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை

அண்மையில் வீசிய கடும் காற்றினால் வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் சேதமடைந்த வாழைத் தோட்டங்களின் உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விவசாய சம்மேளனக்குழுக் கூட்டத்தில் வாழைச் செய்கையாளர்களுக்கு அழிவுக்குரிய நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என விவசாய சம்மேளனத் தலைவர்களால் கோரிக்கை விடப்பட்டது. இதனை ஏற்றே பிரதேச செயலகத்தினால் வாழைமர அழிவுக்கான நஷ்டஈடு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தைத் தொடர்ந்து இப்பகுதியில் சேதமடைந்த வாழைத் தோட்டங்கள் பற்றிய விவரங்களைத் திரட்டுமாறு கிராமசேவையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

வலிகாமம் தெற்கு பிரதேச உதவிப் பிரதேச செயலர் த.தேவராஜன் தலைமையில் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் மேற்படி கூட்டம் இடம்பெற்றது. இதில் வலிகாமம் தெற்கு பிரதேச சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு, விவசாய குளங்கள் மற்றும் கால்வாய்கள் புனரமைப்பு, மருதனார்மடம் சந்தையில் விவசாயிகளுக்கு ஏற்படும் கஷ்டங்கள், நிலத்தடி நீர் உவர் நீராக மாறுதல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் பொருண்மிய நிறுவனத்ததைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (ஒ-152)

## பாடசாலை மாணவர்களுக்கு சின்னமுத்து நோய்த் தடுப்பூசி

சண்டிலிப்பாய்,மே23

சின்னமுத்து நோய்த்தடுப்பூசி ஏற்றும் சுகாதார அமைச்சின் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் 10வயது முதல் 14வயதுடைய சகல மாணவர்களுக்கும் சின்னமுத்து நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது. இந்த நடவடிக்கை எதிர்வரும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் மேற்கொள்ளப்பட உள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தோறும் இதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலைகளில் ஆண்டு ஐந்து தொடக்கம் ஆண்டு 10வரையுள்ள வகுப்புகளில் கற்கும் 10வயதுக்கும் 14வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கு இந்த நோய்த்தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்படவுள்ளது. பாடசாலைக்கு செல்லாத இதே வயதுடைய ஏனைய சிறுவர்களுக்கும் பாடசாலைகளில் வைத்து இந்த ஊசி மருந்து ஏற்றப்படவுள்ளது. சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் இத்தகவல்களைத் தெரிவித்தன.

இதேவேளை, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 72பாடசாலைகளில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பிரிவிலுள்ள 11,ஆயிரத்து 674 மாணவர்கள் இதனால பயன்பெறுவார்கள் என்றும் தெரியவருகின்றது. குடும்ப சுகாதார அலுவலர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் இப்பணியில் ஈடுபடவுள்ளனர். சுகாதார தொண்டர்களின் உதவியும் இதற்குப் பெறப்படும். (ஒ-135)

# இறை தொண்டும் இறைதியானமுமே ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிவகுக்கும்

கடவுள் ஒருவர் இருக்கின்றாரா? அப்படியானால் அவர் எங்கே இருக்கின்றார்? அவர் எப்படி இருப்பார்? அவரது வடிவம் என்ன? நாம் ஏன் அவரை வணங்க வேண்டும்? அவர் யார்?

இவ்வாறான இன்னோரன்ன பல கேள்விகளை அடுக்கிக்கொண்டே போகும் இளைய சமுதாயம் வாழ்கின்ற இன்றைய காலகட்டத்தில் ஆஸ்திகத்தை விட நாஸ்திகம் பேசுபவர்தான் அதிகம்.

**இயந்திர வாழ்க்கை**

நாம் கட்டாயம் கோயிலுக்குப் போகத்தான் வேண்டுமா? ஏன் வீட்டிலிருந்து கொண்டே கடவுளை வழிபட முடியாதா? என்று கேட்கவும் நியாயம உண்டு. ஏனெனில், இன்று மனிதன் இயந்திரவாழ்க்கை வாழ்கின்றான். நேரம் போதாமல் தத்தளிக்கின்றான்.

கொஞ்சம் சிந்தனையை ஓடவிட்டுப்பாருங்கள் உங்களுக்கு மிகவும் நல்ல பதில் காத்திருக்கும்.

நாங்கள் ஒரு பானையைப் பார்க்கின்றோம். அந்தப் பானையை யாரோ ஒரு மனிதன்தான் செய்திருக்க வேண்டும். ஒருவரால் உருவாக்கஞ் செய்யப்படாமல் அது வந்திருக்க முடியாது. அதே போலத்தான் இந்த உலகமும் அதில் வாழும் ஜீவராசிகளும். ஆகவே, ஒன்றில்லாமல் மற்றொன்று உருவாக இடமேயில்லை.

உலகத்தைப் படைத்த கடவுள் தான உயிர்களையும் படைத்திருக்கின்றார். அவர்தான் நம்மையெல்லாம் காத்துரட்சிக்கின்றார். அவர் ஆட்டுவிக்கின்றார். நாம் ஆடுகின்றோம்.

இதுதான் உண்மை, நாம் இதைப புரிந்துகொள்ளாமல் அவஸ்தைப்படுகின்றோம். நாங்கள் வீணாகக் காலங்கழிக்கின்றோம். 'நான், எனது' என்று அடிபட்டுக்கொள்கின்றோம். பிறக்கும்போது ஏதாவது கொண்டு வந்தோமா? இல்லையே! இறக்கும்போதும் ஏதா

**ஞானக்கதிர்**

வது கொண்டு போகப்போகின்றோமா? அதுவும் இல்லையே! அப்படியிருக்க ஏன் இந்த வீணான முரண்பாடுகள்?

'கடவுள் இல்லாமல் உலகம் இயங்கமுடியாது. அவர்தான் இந்த உலகின் காரணகர்த்தா; அதாவது சிருஷ்டி கர்த்தா. நாம் ஒரு குத்துவிளக்கை ஏற்றி வைக்கின்றோம். அந்தக் குத்துவிளக்கின் ஒளி சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. இப்போது ஒரு கேள்வி, அதாவது குத்துவிளக்கு எந்தப் பக்கம் பார்த்து எரிகின்றது? எங்கெல்லாம் ஒளி வீசுகின்றது? சொல்லுங்கள் பார்க்கலாம்!

நன்றாக அவதானித்துப் பார்த்தால் அது எல்லாப் பக்கமும் பார்த்துத்தான் எரிகின்றது; நாலாபக்கமும் தான் ஒளிவீசுகின்றது. அதுபோலத்தான் கடவுள் எல்லா இடத்திலும் எல்லா திசையிலும் பார்த்த வண்ணமே இருக்கின்றார். இதை விட வேறு விளக்கம் வேண்டுமா?

**உலகின் கருத்தா**

கடவுளைக் கோயிலுக்குப் போய்த்தான் வழிபடவேண்டுமா? வீட்டில் இருந்து கொண்டே வழிபாடு செய்ய முடியாதா? உதாரணமாக ஒரு பசுமாட்டை எடுத்துக்கொள்வோம். பசுவின உடம்பில் பால் இருந்தாலும் மடிக்காம்பு வழியேதான் பாலைக்கறக்க முடியும்.அதுபோலவே உலகெங்கும் கடவுள் இருப்பினும் கோயிலில் தான அருளைப் பெறமுடியும்.

**இறைவனின் இன்னருள்**

நிலையான வீட்டின்பத்தைப் பெறுவதற்கு இறைவனின் திருவருட்பெருங் கருணை வேண்டும். அந்தக் கருணையை அடைய நாம் கருணா

**சிவநெறிக் கலாநிதி**
**இராசையா ஸ்ரீதரன்**

மூர்த்தியை கைதொழுதல் அவசியம அவ்வாறு அவரைக் கைதொழுவதற்கும் அவனுடைய அருள்தான் வேணடும். 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்றபடி இறைவனின் திருவருளால் அவனுடைய திருத்தாள்களை வணங்கி பேரானந்தப் பெருவாழ்வை அடைய முயற்சிக்க வேண்டும். அதற்கு ஒரே வழி யாதெனில் இறை தியானமும் இறை தொண்டுமே.

இந்த இரண்டையும் இடைவிடாது பயபக்தியுடன் செய்து கொண்டு வந்தால் இறைபதம் நிச்சயம் கிட்டும்.

## அழைப்புக் கட்டளை

இல. 16 - பிரிவு 55 (1)

சாவகச்சேரி என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்

தங்கவேலாயுதம மனைவி
வேலுப்பிள்ளை மகள்
விஜயவசந்தசோபனி
மே/பா.ச.சண்முகராசா.
பிலிப்பு றோட், மட்டுவில் சந்தி,
சாவகச்சேரி.

\- வழக்காளி

வழ.இல. மணநீக்கம் /357

எதிர்

அருளானந்தசாமி தங்கவேலாயுதம்,
திருவில், வல்வெட்டித்துறை.

\- எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிக்கு,

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி பிராதின் நிவாரணத்தில் வேண்டி நிற்கும் நிவாரணங்களைப் பெறுவதற்கு,

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் பட்சத்தில், வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற சட்டத்தரணிமூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான சகல அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படுவதற்கான முகவரியை கூறும் விவரக் குறிப்பொன்றை இந்நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றத்தின் ஆணைப்படி!
க.நாகேந்திரன்
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.


குறிப்பு: விளக்கத் திகதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றில் இவ்வழக்கு ஏற்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீர் பெறவிரும்பினால் உமது பதிவு செய்யப்பட்ட முகவரியை இந்நீதிமன்றின் பதிவாளரிடம் கொடுக்கும்படியும் பதிவு அஞ்சல் மூலம் உமக்கு அதனை அறிவிப்பதற்காக ஏற்படும் அஞ்சல் செலவுக்கான முத்திரைகளையும் கொடுக்குமாறும் இத்தால் குடி.ந.ச.கோவையின் 80ஆம் பிரிவின் கீழ் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

க.நாகேந்திரன்
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

வரைவு
திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன்
வழக்காளியின் சட்டத்தரணி.

(18299)

## 31ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு 13 - 05 - 1927

உதிர்வு 23 - 04 - 2003

**அமரர் கந்தையா கனகரெத்தினம்**

முப்பத்தி ஒரு நாள்கள் ஆனதுவே
இந்த அழியாத் துயர்
எம்மைப் பிரிந்து சென்ற ஐயாவின்
ஆத்மா மஞ்சவனப்பதி முருகன்
திருப்பாதத்தில் நித்திய அமைதி
பெறப் பிரார்த்திக்கின்றேன்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

சாந்தி (மகள்).

(18298)

## கைதடியில் விளையாட்டுப் போட்டி

கைதடி மத்திய வளர்மதி சன சமூக நிலையத்தின் 44ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய மைதானத்தில் விளையாட்டுப போட்டியொன்றை நிலையத் தலைவர் பொன்.கிருஸ்ணன் தலைமையில் நடத்தப்படவுள்ளது.

அத்துடன் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு மரதன் ஓட்டப்போட்டி நிகழ்வு ஒன்றும் தென்மராட்சி ரீதியில் நடத்தப்பட உள்ளது.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்புவோரை அன்றைய தினம் காலை 6.00 மணிக்கு கைதடிச் சந்திக்கு வருமாறு வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் நா.பிரதீபன் கேட்டுள்ளார். (ஓ-75)

## யாழ்.எவ்.எம்.நடத்தும் நேயர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம்,மே23

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.எவ்.எம். நேயர்களுடனான சந்திப்பொன்றை நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடத்தவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் என்.எஸ்.சிவராசா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் நேயர்கள் கலந்துகொண்டு யாழ். எவ்.எம்.நிகழ்ச்சிகள் தொடர்பான தங்களுடைய கருத்துக்களை முன்வைக்குமாறு யாழ்.எவ்.எம்.பணிப்பாளர் சிசிரகுமார மெனிக்திவெல கேட்டுள்ளார். (ரி)

## பண்டம் எடுக்கும் வைபவம்

வரணி சுட்டிபுரம் அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தை ஒட்டி பண்டம் எடுத்துச் செல்லும் வைபவம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும். மறுநாள் செவ்வாய்க்கிழமை அபிஷேக ஆராதனையும் விசேட பூசையும் நடைபெறும். (ஓ-170)

## திரைப்படக் காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில்' அகதாகிறிஸ்ரி'யின் நாவலை அடிப்படையாகக் கொண்டு 'சிட்னி லுமெற்றின்' இயக்கத்தில் உருவான' மேடர் ஒன் த ஓரியண்ட் எக்ஸ்பிரஸ்' என்ற ஆங்கிலத் திரைப்படம் தமிழ் உபதலைப்புகளுடன் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புலியியற்றுறை மண்டபத்தில்காண்பிக்கப்படும்.(ஓ-6)

## தெய்வீக ஸ்தலங்களில்



கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வியாகுல அன்னை 'கெபி'யை யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. ஜே.பி. செல்வராஜா அடிகளார் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருட்திரு. எஸ். மங்களராஜா அடிகளார், அருட்திரு.எஸ்.ஜெயக்குமார் அடிகளார், கரவெட்டி பங்கைச் சேர்ந்த ஆர்.இ. ஆனந்தராஜா ஆகியோரும் அருகே உள்ளனர்.

(படம்: வடமராட்சி செய்தியாளர்)




ஏழாலை ஆத்ம ஜோதி தியான மணிமண்டப நிலையத்தினரால் நடத்தப்பட்ட சமய அறிவு போட்டியில் பரிசுபெற்ற சிறுவர், சிறுமியர், நிலைய அறநெறி பாடசாலை ஆசிரியை மற்றும் தியான மணிமண்டப அமைப்பாளர் ஆகியோருடன் எடுத்துக்கொண்ட படம் இது.

(படம்: தென்மராட்சி செய்தியாளர்)



ஆனைக்கோட்டை உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலய மகோற்சவத்தின்போது சமய சொற்பொழிவாற்றிய சண்முககுமரேசன் பாலசண்முகன், தண்டிகை திருவிழா அன்று கௌரவிக்கப்பட்டார்.

பாலசண்முகனுக்கு யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (வலிகாமம் தெற்கு செய்தியாளர்)



குப்பிளான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலயத்தில் 'காசிவாசி' செந்தில்நாதையரின் நினைவுவிழா சமீபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு செந்தில்நாதையரின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்த சிறப்பு விருந்தினர், இந்து கலாசார அமைச்சின் துணைச் செயலாளர் சி.சிவமகாலிங்கம் மற்றும் ஆலய நிர்வாகத்தினரைப் படத்தில் காணலாம்.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



## மிதுனம்

சனி 12ஆம் இடத்தில் இருந்து உங்கள் ராசிக்கு வந்திருக்கிறார். இது சிறப்பான இடம் என்று சொல்லமுடியாது. சனி 12ஆம் இடத்தில் இருக்கும் போது பொருள் விரயம் அதிகம் ஏற்பட்டு இருக்கும். வீண் அலைச்சல் உருவாகி இருக்கும். எடுத்த காரியங்கள் வெற்றி அடையாமல் போயிருக்கலாம். இந்த பிற் போக்கான நிலை இனித் தொடராது. ஆனால் பலன் கள் மாறுபடும். பொதுவாக சனி ராசியில் இருக்கும் போது உடல் உபாதைகள் பாதிக்கப்படலாம். உறவினர்கள் வகையில் வீண் மனக்கசப்பு வரலாம். வெளியூர் வாசம் இருக்கும் என்று சொல்வார்கள். ஆனால் மற்றைய கிரகங்கள் அவ்வப்போது நன்மை தருவார்கள். நீங்கள் எடுத்த காரியம் வெற்றிகரமாக முடியும்.

பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். வேண்டிய பொருள்களை வாங்குவீர்கள். 2003 ஜூலைக்கு பிறகு உங்கள் முயற்சிகளில் சிற்சில தடைகள் வரலாம். 2005ஆம் ஆண்டு செலவுகள் அதிகரிக்கும். அதேபோல் வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஆனந்தமும் நீடிக்கும். வீட்டிற்குத் தேவையான வசதிகள் கிடைக்கும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் 2004 ஓகஸ்ட் மாதத்துக்குள் நடக்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். சிலர் வசதியான வீட்டிற்கு குடிபுகலாம். புதிய வாகனம் வாங்கலாம். உறவினர்கள் வகையில் அனுகூலமான போக்கு இருக்காது. அளவோடு பேசி உறவை நீடித்துக் கொள்வது நல்லது.

2004 ஓகஸ்ட் மாதத்திற்கு பிறகுப் சுபநிகழ்ச்சிகள் தள்ளிப் போகலாம். உத்தியோகத்தில் குருவின் பலத்தால் பதவி உயர்வு கிடைக்கும். வேலை இன்றி இருப்பவர்களுக்கு இந்த ஆண்டில் வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. 2004 ஓகஸ்டுக்கு பிறகு எதிர்பார்த்த பலனை பெறமுடியாது. அதன்பின் வேலைப் பளு அதிகரிக்கும். சிலர் வேலை நிமித்தமாக குடும்பத்தைவிட்டுப் பிரிந்து செல்ல வேண்டியிருக்கும். வியாபாரிகள் நல்ல பண புழக்கத்தோடு காணப்படுவர். பகைவர்களின் இடையூறு அவ்வப்போது தலைதூக்கும். குறிப்பாக 2003 ஜூலைக்கு பிறகு 2004 ஓகஸ்ட் வரை அதிக அளவு தடைகளைச் சந்திக்க வேண்டி வரலாம். 2005ஆம் ஆண்டில் சிலர் தீயோர் சேர்க்கையால் பணத்தை விரயமாக்கலாம்.

எதிலும் குறைந்த அளவே முதலீடு செய்யவும். கலைஞர்கள் நல்ல புகழும் பெருமையும் கிடைக்கப் பெறுவர். 2004 ஓகஸ்டுக்கு பிறகு அதிக சிரத்தை எடுத்தே புதிய ஒப்பந்தத்தைப் பெறவேண்டியிருக்கும். மாணவர்கள் இந்த ஆண்டு சிறப்பான பலனைக் காணலாம். அடுத்த கல்வி ஆண்டு முயற்சிக்குத் தகுந்த பலனைக் கொடுக்கும். ஆனால் 2004 / 2005 கல்வி ஆண்டில் அதிக சிரத்தை எடுத்துப் படிக்க வேண்டியிருக்கும். விவசாயிகள் நல்ல வளத்தைக் காணலாம். 2005ஆம் ஆண்டில் எதிர்பார்த்த அளவு வருவாய் இருக்காது. வழக்கு விவகாரங்கள் தொடக்க காலத்தில் சாதகமாக இருக்கும் பின்னாளில் எதிர்பார்த்தபடி அமையும் என்று சொல்லமுடியாது. உடல் நலம் தற்போது சிறப்பாக இருக்கும். 2003 ஓகஸ்டுக்கு பிறகு சிறுசிறு பாதிப்புகள் வரலாம். குறிப்பாக குழந்தைகள் உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டியிருக்கும். 2005ஆம் ஆண்டில் வயிற்றுப் பிரச்சினை வரலாம்.

### 2003 மே முதல் 2003 ஜூலை வரை

குருவின் பலத்தால் எதையும் எதிர்கொள்ளும் தைரியம் இருக்கும். எதிரிகளின் சதியை முறியடிப்பீர்கள். பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். பொருள் விரயமும் வீண் அலைச்சலும் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நீடிக்கும். திருமணம் கைகூடும். பிள்ளை பாக்கியம் கிடைக்கும். வீட்டிற்குத் தேவையான வசதிகள் கிடைக்கும். புதிய வீடு செல்ல விரும்புபவர்கள் இந்த கால கட்டத்தைப் பயன்படுத்தவும். உறவினர்கள் உதவிக்கரமாக இருக்கமாட்டார்கள். உத்தியோகம் சிறப்பாக நடக்கும். வக்கீல்கள், ஆசிரியர்கள் மற்றும் பத்திரிகைத் துறையினர் மிகுந்த சிறப்பான பலனைக் காணலாம். வியாபாரம் வளரும். கேதுவால் பணப்புழக்கம் இருக்கும். வேலையின்றி இருப்பவர்கள் குறைந்த முதலீட்டில் தொழில் தொடங்கலாம்.

### 2003 ஓகஸ்ட் முதல் 2004 ஓகஸ்ட் வரை

கேது 5ஆம் இடத்திற்கு வந்துவிடுகிறார். இது சாதகமற்ற நிலை என்றாலும், ராகு 11ஆம் இடத்திற்கு சென்று நன்மையை தருவார். குருபகவான் 2ஆம் இடத்தில் இருந்து 3ஆம் இடத்திற்குச் செல்கிறார். இது சிறப்பான இடம் அல்ல. ஆனால், அவரது அனைத்துப் பார்வைகளும் சிறப்பாக உள்ளன. குருவின் பார்வைக்கு கோடி நன்மைகள் கிடைக்கும் என்பது ஜோதிட மொழி. இதனால் தொழிலில் இருந்த தடைகள் விலகும். லாபம் கூடுதலாகக் கிடைக்கும். கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும். பொருளாதார வளம் தொடர்ந்து சிறப்பாக இருக்கும். வீட்டிற்குத் தேவையான வசதிகள் கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் கடந்த காலத்தைப் போல நற்பலனைப் பெறமுடியாது. சிலர் விருப்பம் இல்லாத இடத்திற்கு மாற்றம் ஆகலாம். சிலர் பதவியை இழக்கும் நிலைக்குத் தள்ளப்படலாம். கலைஞர்களுக்கு பணப்புழக்கம் இருந்தாலும் உடல்நலம் சீராக இருக்கும். சிறுசிறு உபாதைகள் வரலாம். பிள்ளைகள் உடல்நலனிலும் அக்கறை காட்ட வேண்டியிருக்கும்.


### 2004 செப்ரெம்பர் முதல் 2005 ஜனவரி வரை

குருபகவான் 4ஆம் இடத்திற்குச் செல்வது சிறப்பானது அல்ல. அவரது பார்வையாலும் பலன்கள் கிடைப்பது அரிது. அதேநேரம், 2005ஆம் ஆண்டு பெப்ரவரிவரை வேதையின் அடிப்படையில் குருவால் செயற்படமுடியாமல் இருப்பது உங்களுக்கு நல்லது தானே. ராகுவின் நற்பலன்கள் தொடரும். பணப்புழக்கம் இருக்கும். காரிய அனுகூலம் ஏற்படும். கணவன் மனைவி இடையே அன்பு நீடிக்கும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கத் தாமதம் ஆகும். உத்தியோகம் பார்ப்பவர்கள் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். வியாபாரம் சீராக நடக்கும். பண புழக்கம் இருக்கும். அதிகமாக உழைக்க [illegible] யிருக்கும். கலைஞர்கள் முயற்சியின் [illegible] புதிய ஒப்பந்தங்கள் பெறுவர். எதிர்பார்த்த புகழ் பாராட்டுக் கிடைப்பது அரிது. உடல்நலன் சுமாராக இருக்கும். சிறுசிறு உபாதைகள் வந்தாலும் பாதிப்பு ஏதும் வராது.

### 2005 பெப்ரவரி முதல் 2005 ஜூன் வரை

ராகு சாதகமற்ற இடமான 10ஆம் வீட்டிற்கு சென்றுவிட்டார். அதேபோல் கேதுவும் 5இல் இருந்து 4ஆம் வீட்டிற்கு வருகிறார். இதுவும் சாதகமற்ற நிலையே. குருவும் அதே இடத்தில் நீடிப்பதால் எந்த ஒரு காரியத்தையும் அதிக முயற்சி எடுத்தே முடிக்க வேண்டியிருக்கும். பொருளாதார வளம் சுமாராகவே இருக்கும். குடும்பத்தில் தம்பதியினரிடையே அன்பும் பாசமும் நீடிக்கும். பெண்கள் வகையில் கிடைத்து வந்த உதவி இனிக் கிடைப்பது அரிது. உத்தியோகம் பார்ப்பவர்கள் தொடர்ந்து அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். இடமாற்றப் பீதி தொடரலாம். வியாபாரிகள் சுமாரான லாபத்தையே பெறமுடியும். புதிய வியாபாரத்தைத் தொடங்கவேண்டாம். சிலர் தீயோர் சேர்க்கையால் பணத்தை விரயமாக்குவர்.

கலைஞர்கள் எதிர்பார்த்ததைப் பெறமுடியாமல் போகலாம். யாரிடமும் அனுசரித்து போகவும், மாணவர்கள் கஷ்டப்பட்டு படிக்கவேண்டும். உடல் நலம் சுமாராக இருக்கும். வயிறு தொடர்பான உபாதை வரலாம். பயணத்தின் போது சற்று கவனம் தேவை.



## கடகம்

சனி இதுவரை 11ஆம் இடத்தில் இருந்து பல்வேறு நன்மை தந்தார். அவரோடு ராகுவும் இணைந்து அதிக பணப்புழக்கத்தைக் கொடுத்தார். தொழில் சிறப்பாக இருக்கும். வீட்டில் மகிழ்ச்சியும் ஆனந்தமும் இருந்திருக்கும். இந்தநிலையில், இப்போது சனி 11ஆம் இடத்தில் இருந்து 12ஆம் இடத்திற்குச் செல்கிறார். இந்த சனிப்பெயர்ச்சியால் நீங்கள் பழைய பலனை எதிர்பார்க்கமுடியாது. இது உங்களுக்கு ஏழரைச் சனி ஆரம்பகாலம். சனி 12ஆம் இடத்தில் இருக்கும்போது பொருளாதார இழப்பு வரலாம். வெளியூர் பயணம் ஏற்படும். எதிரிகளின் இடையூறு அவ்வப்போது வரலாம். இப்படிப்பட்ட பிற்போக்கான பலனைக் கண்டு அஞ்சவேண்டாம். காரணம் சனி சாதகமற்ற நிலையில் இருந்தாலும் சனியின் 7ஆம் இடத்துப் பார்வை சாதகமாக இருக்கிறது. இதனால் அவர் நல்ல பொருளாதார வளத்தைக் கொடுப்பார்.

பகைவர்களை எதிர்கொள்ளும் ஆற்றல் கிடைக்கும். இதுதவிர சனிக்கு வேதை ஸ்தானத்தில் குருவும் ராகுவும் வரும்போது அவரால் கெடுபலனைக் கொடுக்க முடியாது. மற்றைய முக்கிய கிரகங்களான குரு, ராகு, கேது ஆகியோர் அவ்வப்போது நன்மை தருவார்கள். மேலும் கேதுவுக்கு வேதையாக ராகு இருக்கும்போது கேதுவால் கெடுபலன்கள் நடக்காது. சனியால் அதிக செலவு தந்தாலும், அதற்கு தகுந்தாற்போல் பணவரவை ராகு, குரு, கேது ஆகியோர் அடுத்தடுத்துக் கொடுப்பார்கள். எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாகச் செய்துமுடிக்க உதவுவார்கள். 2003 ஜூலை முதல் 2004 ஓகஸ்ட் வரை குருபகவான் உங்களுக்கு வரும் தடையை முறியடித்து வெற்றியைத் தருவார். மதிப்பு மரியாதை சிறப்பாக இருக்கும்.

2005ஆம் ஆண்டு செல்வாக்கு சுமாராக இருக்கும். வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம். தேவைகள் பூர்த்தியாகும். சிலர் முயற்சி எடுத்தால் சொத்து சுகம் வாங்கலாம். சனியின் பார்வையால் சிலர் புதிய வாகனம் வாங்கலாம். தொடக்கத்தில் சிலர் மந்தமாக இருந்தாலும் போகப்போக சுறுசுறுப்புடன் இயங்கி முன்னேற்றத்துக்கு வழிவகுப்பர். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறை இருக்காது. கணவன், மனைவி இடையே அன்பு நீடிக்கும். சுபநிகழ்ச்சிகள் கைகூடும். நீண்ட நாள்களாகத் தடைபட்டு வந்த திருமணம் 2003 ஜூலைக்கு பிறகு கைகூடும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். 2004 ஓகஸ்ட் மாதத்துக்குள் புதிய வீடு வாங்க நினைப்பவர்களின் எண்ணம் நிறைவேறும்.

சிலர் புதிய வாகனம் வாங்கலாம். 2004 ஓகஸ்ட் மாதத்திற்குப் பிறகு திருமணம் போன்ற நிகழ்வுகள் தள்ளிப் போகலாம். உத்தியோகம் பார்ப்பவர்கள் தொடக்க காலத்தில் சிறப்பான முன்னேற்றத்தைக் காணலாம். 2003 ஜூலைக்குப் பிறகு மிக உன்னத நிலையைக் காணலாம். இதுவரை கிடைக்காத பதவி கிடைக்க வாய்ப்பு உண்டு. விரும்பிய இடத்திற்கு மாற்றம் கிடைக்கும். 2004 ஓகஸ்ட் மாதத்திற்குப் பிறகு குரு சாதகமற்ற நிலைக்குச் சென்றாலும் அவரது பார்வையால் சிறப்பான பலன்கள் தொடரும். வியாபாரிகள் நல்ல லாபத்தைக் காணலாம். பொருளாதார வளம் சிறப்பாகவே இருக்கும். வேலையின்றி இருப்பவர்கள் குறைந்த முதலீட்டில் புதிய தொழிலை ஓகஸ்ட் மாதத்திற்குள் ஆரம்பிக்கலாம். ஓகஸ்டுக்கு பின் வியாபாரத்தில் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும்.

2003 ஜூலையில் இருந்து குருவின் பலத்தால் எதிரிகளைச் சமாளிக்கும் திறமை உண்டு. 2004 ஓகஸ்டுக்குப் பிறகு சிற்சில பிற்போக்கான பலன்கள் நடக்கலாம். 2005 பெப்ரவரியில் இருந்து விலகிவிடும். கேது சாதகமான இடத்திற்கு வந்து பொருளாதார வளத்தை அதிகரிக்கச் செய்வார். கலைஞர்கள் 2003 ஜூலைக்கு பிறகு 2004 ஓகஸ்ட் வரையும் குருவின் பலத்தால் மிகவும் சிறப்பான பலனை கிடைக்கப் பெறுவர். 2003 ஜூலைக்குப் பின்னர் 2004 ஓகஸ்டுக்குள் உயர் பதவி கிடைக்க வாய்ப்பு உண்டு. அதன்பின் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். மாணவர்கள் இந்தக் கல்வி ஆண்டு உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். 2004 / 2005 கல்வி ஆண்டில் முயற்சி எடுத்துப் படிக்க வேண்டியிருக்கும். வழக்கு விவகாரங்கள் திருப்திகரமாக இருக்கும். பாதகமான தீர்ப்பு வராது. உடல்நலம் சுமாராக இருக்கும். கேதுவால் பித்தம், மயக்கம், வயிறு தொடர்பான உபாதைகள் வரலாம். பிள்ளைகள் உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டியிருக்கும். 2005 பெப்ரவரிக்குப் பிறகு உடல் நலம் பூரண குணமடையும். மருத்துவ செலவு குறையும்.

### 2003 மே முதல் 2003 ஜூலை வரை

ராகு மட்டும் சாதகமாக நின்று நல்ல பலனைக் கொடுப்பார். குரு உங்கள் ராசியில் இருப்பது திருப்தி அல்லதான். என்றாலும் அவரது அனைத்துப் பார்வைகளும் சாதகமாக உள்ளன. சனியும் கேதுவும் சாதகமற்ற நிலையில் இருந்தாலும் பாதகம் இல்லை. பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். செலவு அதிகரிக்கும். எடுத்தகாரியம் நிறைவேறும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் சீரான நிலையில் இருப்பர். அதிக உழைப்பை சிந்த வேண்டியிருக்கும். வியாபாரம் லாபத்தை தரும். பகைவர்களின் இடையூறு அவ்வப்போது வரும். புதிய வியாபாரத்தைத் தொடங்குவதைவிடத் தற்போது உள்ளதை விரிவுப்படுத்தி சிறப்பாக நடத்துவது நல்லது. கலைஞர்கள் உழைப்புக்கு ஏற்ற வளத்தைக் காணலாம். புதிய ஒப்பந்தம் கிடைக்கும்.

### 2003 ஓகஸ்ட் முதல் 2004 ஓகஸ்ட் வரை

குரு சாதகமான இடத்திற்கு வந்துவிடுவார். ஆனால், இதுவரை நற்பலனைக் கொடுத்துக் கொண்டிருந்த ராகு 10ஆம் இடத்திற்குச் செல்கிறார். கேது 4ஆம் இடத்திற்கு வருகிறார். இவை இரண்டும் திருப்தியற்ற நிலைதான். குருவின் பலத்தால் பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். இதுவரை தடைப்பட்டு வந்த திருமணம் கைகூடும். உத்தியோகம் பார்ப்பவர்கள் சிறப்பான முன்னேற்றத்தைக் காண்பர். பதவி உயர்வுகிடைக்கும். வியாபாரம் சீராக நடக்கும். பணப்புழக்கம் இருக்கும். தீயோர் சேர்க்கையால் சிலர் பணத்தை விரயமாக்கலாம். விவசாயிகளுக்கு நெல், கோதுமை, சோளம், கேழ்வரகு போன்ற தானியங்கள் நல்ல விளைச்சலைத் தரும். வயிறு தொடர்பான பிரச்சினை வரலாம். பிள்ளைகள் உடல் நலனில் முன்னேற்றம் கிடைக்கும். பணத்தின் மீது சற்று அக்கறை காட்டவேண்டியிருக்கும்.

### 2004 செம்ரெம்பர் முதல் 2005 ஜனவரி வரை

தற்போது குருபகவான் 2ஆம் இடத்தில் இருந்து 3ஆம் இடத்திற்குச் செல்கிறார். இது திருப்தியற்ற இடம்தான். என்றாலும், கவலைகொள்ள வேண்டாம். குருவின் அனைத்துப் பார்வைகளும் நல்ல நிலையில் இருக்கின்றன. குருவின் பார்வைக்குக் கோடி நன்மை உண்டு என்பது ஜோதிட மொழி. அவர் பல்வேறு முன்னேற்றங்களைக் கொடுப்பார். அதோடு, தற்போது சனியால் உங்களுக்கு கெடு பலனைத் தரமுடியாது. காரணம் அவருக்குத் தேவையான 3ஆம் இடத்தில் குரு அமைந்திருப்பதுதான். சனியை குரு செயற்படவிடாமல் ஆக்கிவிடுவார். ராகுவும் கேதுவும் அதே இடத்தில் இருக்கிறார்கள். அவர்களின் சாதகமற்ற பலனால் உங்களுக்கு பாதிப்பு ஏதும் வராது. உங்கள் முயற்சிகளில் அவ்வப்போது தடைகள் வரலாம். எதையும் அதிக சிரத்தை எடுத்தே முடிக்க வேண்டியிருக்கும். பணப்புழக்கத்திற்குக் குறை இருக்காது. குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக் குறை இருக்காது. தொழிலில் சிலர் மந்தத்தைச் சந்திக்கலாம். உத்தியோகம் பார்ப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். கலைஞர்களுக்கு வரவேண்டிய புகழ், பாராட்டு தட்டிப் பறிக்கப்படலாம்.

### 2005 பெப்ரவரி முதல் 2005 ஜூன் வரை

மீண்டும் நல்லகாலம் ஆரம்பமாகிறது. 4ஆம் இடத்தில் இருக்கும் கேது 3ஆம் இடத்திற்கு வருகிறார். அவர் இறை அருளையும் பொருளாதார வளத்தையும் கொடுப்பார். எடுத்த காரியத்தில் வெற்றியைத் தருவார். இதனால் நீண்டநாள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம். ராகு 3ஆம் இடத்திற்கு வருவது சிறப்பான இடம் அல்ல. என்றாலும், அவரால் தொழிலில் இருந்து வந்த மந்தம் இனி இருக்காது. உழைப்புக்குத் தகுந்த முன்னேற்றம் கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் தொடர்ந்து வேலையில் அக்கறையுடன் இருக்கவேண்டும். குருவின் பார்வைகள் சிறப்பாக இருப்பதால் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்படமாட்டீர்கள். கலைஞர்களும் கடுமையாகப் பாடுபடவேண்டும்.

(வளரும்)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு வளவு விற்பனைக்கு

கோப்பாய் பிரதேச சபைக்கு அண்மையில் பருத்தித்துறை வீதிக்கு மேற்காக அமைந்த 10 பரப்பு வீடு வளவு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மா.வைகுந்தவாசன், பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.(18264)

## விற்பனைக்கு

புதிய HUAWIN - HY - 70 மோட்டார் சைக்கிள் சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.பரந்தாமன், இல.82, பலாலி றோட், திருநெல்வேலி. (18305)

## தேவை

திருநெல்வேலிக்கருகில் வேலிக்கு கிளுவைக் கதியால் தொகையாகத் தேவை. விலை, இருக்குமிடம் போன்ற விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். விள.இல.1903, மே/பா உதயன். (18304)

## கைமாறிவிட்டது

இராசா இரும்புக்கடை, ஸ்ரான்லி வீதி முன்னால் நிறுத்தப்பட்டிருந்த லுமாலா சைக்கிள் (இல.55658822) தவறுதலாக வேறு ஒருவரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அவரது ஏசியா சைக்கிள் கடையில் இருக்கின்றது. தயவுசெய்து உடனே மேற்படி முகவரியில் சைக்கிளைக் கொடுத்து மாற்றிக்கொள்ளவும். (18291)

## வாடகைக்கு

இல.767, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்ய தனியார் வைத்தியசாலை தொலைபேசி, அற்றாஜ் பாத்றூம் சவர், சகல தொகுதிகளுக்கும் மின் விசிறிகளையும் அதே வசதியுடைய றம்மிய சூழலில் அமைந்த 4 வாகனத் தரிப்பிட வசதிகளுடனான பெரிய வீடும் 3 கடைத் தொகுதிகளும் வாடகைக்கு உண்டு. தொடர்பு: நேரில். (18260)

## தவறிவிட்டது

C-2/2, விவேகானந்தா மேடு, கொழும்பு - 13ஐச் சேர்ந்த கதிர்காமம்பிள்ளை சுதர்சன் என்பவருடைய தே.அ.அ.(இல.813070618X) ஆடியபாதம் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அ.நிர்மலானந்தன், இல.94, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்ததவும். (18297)

நீர்வேலி மேற்கைச் சேர்ந்த அன்ரன் அமலதாஸ் லோறன்ஸ் என்பவருடைய தே.அ.அ.(இல.803330670V) கோப்பாய் கிருஷ்ணன் கோயிலுக்கும் மாவீரர் மயானத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (18293)

சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த அருணாசலம் நாகேஸ்வரி என்பவருடைய தே.அ.அ. (இல. 428491602V), வி.அ.அ., மூக்குக் கண்ணாடி என்பன சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சபாரத்தினம் தங்க மாளிகை, சாவகச்சேரி அல்லது V.M.K நகை மாளிகை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (18303)

## அ.அட்டை கண்டெடுப்பு

யாழ்.ஆஸ்பத்திரி வளாகத்தில் கோபாலப்பிள்ளை மயூரி என்பவரின் அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஆஸ்பத்திரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்.

## UNIVERSITY OF JAFFNA

### Invitation of Bids for providing consultancy services

1. Sealed bids are invited from qualified consultants /consultancy firms for the consultancy service for the Supply, Installation,Testing, Commissioning of a PABX System at University of Jaffna.
2. Forms for bidding can be purchased from Assistant Registrar/Administration, University of Jaffna until, 13.06.2003, upon producing receipt for the payment of following fee in cash at the shroff's counter, University of Jaffna.

   **Non refundable Rs. 750/=**
   **Refundable Rs. 5000/=**
3. Bids to be sent to reach Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna, not later than 10.00a.m on 26.06.2003.

The bidders should provide adequate proof that they have successfully completed similar project or that any of the Engineers employed by bidder has completed similar project.

Further particulars can be obtained from Assistant Registrar / Administration, University of Jaffna and related documents can be inspected free of charge at Administration Branch, University of Jaffna, during office hours.

P.O.Box 57,
Thirunelvely, Jaffna.

**Registrar,**
**University of Jaffna.** (28028)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1939 - 05 - 18

உதிர்வு 2001 - 05 - 05

அமரர்

### கந்தப்பு மாணிக்கம்

வேதங்களைப் புரட்டிப் பார்க்க பாசங்களை
மொழிபாங்கிய பாவலரே!
தூயங்களாய் நீர் இருந்து சுகந்தங்களை
எமக்களித்த தூயவரே!
அக்கினிச் சுழலது உர்மை அள்ளியெடுத்திரு
ஆண்டுகள் மறையலாம் அந்தப் பாசம் மறையுமா?

புலர் காலையில் மலர்ந்திடு முகிழதில்
தவழ்ந்திடு தென்றலாய் தினம் நிழலென
நடைபயின்றிங்கு ஆசிகள் ஜென்மம்
பலகோடி தரவேண்டும்.

உம் நினைவுடன்:
அன்பின் மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

"வசந்தமஹால்"
கரவெட்டி தெற்கு,
கரவெட்டி. (18238)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை ஆரம்பக்கல்வி நெறியைச் சேர்ந்த
திருமதி சு.சுகந்தி அவர்களின் அன்புக் கணவர்

### அமரர் கி.சுரேந்திரன்

15.03.2003 திடீர்மரணம் அடைந்ததையிட்டு அன்னாரது குடும்பத்திற்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

(18307) கலாசாலை சமூகம், பலாலி ஆசிரிய கலாசாலை.

## பிறந்தநாள் வாழ்த்து

இன்று 74ஆவது வயதில் காலடிவைக்கும் மட்டுவில் வடக்கு ஆரோக்கிய வாச வைத்தியசாலை உரிமையாளர்

### வைத்தியமணி பேதுறு பிலிப்ஸ்

அவர்கள் நீடூழிகாலம் வாழ்ந்து, மருத்துவ உலகிற்கு அளப்பரிய சேவையாற்ற வேண்டுமென அனைவரும் வாழ்த்துகின்றோம்.

தற்போதைய முகவரி:
நவாலி தெற்கு, மானிப்பாய். (சி-28031)

ஆரோக்கிய வாச
வைத்தியசாலை ஊழியர்கள்.

## லூர்து அன்னையின் 'கெபி' திறப்பு விழா

கொழும்புத்துறையில் கோவில் கொண்டு கருணை மழை பொழிந்து வரும் பரிசுத்த செபமாலை மாதா ஆலய வளவில் புதிதாக அமைக்கப்பட்ட 'லூர்து' மலைக் 'கெபி' யாழ்.மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வர் வணா.ஜே.எஸ்.நீக்லஸ் அடிகளாரால் மந்திரித்து திருப்பலி நிறைவேற்றப்பட்டு பிரான்ஸ் நாட்டில் லூர்து அன்னை பெர்னதேத் என்ற சிறுமிக்குக் காட்சிகொடுத்த திருத்தலத்திலிருந்து கொண்டுவரப்பட்ட அன்னையின் சுரூபம் ஆசீர்வதிக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட இருக்கிறது. இந்நிகழ்வு 24.05.2003 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சிறப்பாக நடைபெற இருப்பதால் இதில் பங்குபற்றி அன்னையின் ஆசீர் பெற்றுச்செல்லுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

பங்குத்தந்தை, பங்குச்சபை, பங்குமக்கள்,
பரிசுத்த செபமாலைமாதா ஆலயம்,
கொழும்புத்துறை.

(18301)

# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன் தொழில் பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்ப பயிற்சிநெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

### ஆரம்பம் : 28-05-2003

I. A. Advanced Diploma in Computer Programming — Duration 1 Year
B. Diploma in Micro Soft Office — Duration 6 Months
C. Diploma in Type Setting — Duration 3 Months
D. Diploma in Computerised Accounting — Duration 4 Months
E. Diploma in Access Including S.Q.L. — Duration 3 Months

II. Certificate Courses:- Each 3 Months

| | | |
|---|---|---|
| i) M.S. Word - 2000 | vi) Pascal | xi) d Base for Windows |
| ii) M.S. Excel - 2000 | vii) d Base III+ | xii) Print Shop Deluxe |
| iii) M.S. Access - 2000 | viii) Page Maker | xiii) Adobe Photo Shop |
| iv) M.S. Power Point | ix) Windows 95 | |
| v) Visual Basic Ver. 6.5 | x) Corel Draw | |

III. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) — காலம் 3 மாதங்கள்
IV. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) — காலம் 6 மாதங்கள்
V. கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி (செய்முறைத் திட்டத்துடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்) — காலம் 9 மாதங்கள்
VI. மின் ஒட்டுநர் பயிற்சி (செய்முறைத் திட்டத்துடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்) — காலம் 3 மாதங்கள்
VII. மரவேலை (இயந்திரங்களில் பயிற்சி வழங்கப்படும்) (செய்முறைத் திட்டத்துடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்) — காலம் 6 மாதங்கள்
VIII. குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் — காலம் 6 மாதங்கள்

V, VI, VII. பயிற்சிநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு, பயிற்சி நிறைவில் மீண்டும் ஊக்குவிப்புப் பணம் வழங்கி, ஒரு வருடத்துக்குப் பயிற்சி வழங்கி, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

*குறிப்பு* : குறிப்பிட்ட தொகை மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

### தொழிலாளர்கள் தேவை

1. தச்சுவேலை (CARPENTER)
2. ஒட்டு வேலை (ARC WELDER)

மேற்படி பதவிகளுக்கு சிறந்த அனுபவமும், திறமையும் உள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு :-

**Registrar,**
**Patrician Institutes,**
**59, St. Patrick's Road,**
**Jaffna.**

(சி-28029)

# வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கும் சலுகைகள் எமக்கில்லை!

## உள்ளூர் வர்த்தகர்களின் நிலை பற்றி தொழில் அதிபர் தம்மிக



ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழில் அதிபர் தம்மிக பெரேராவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக்கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பவர் மொழி பெயர்ப்பாளர் சட்டத்தரணி செ.குணரத்னம்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர நிகழ்ச்சியில் கடந்த 20ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் தம்மிக பெரேரா.

தனியார் மின் உற்பத்தி நிலையம், உல்லாசப் பயணத்துறை, ஹோட்டல்கள் மற்றும் இலங்கையின் முக்கிய வங்கிகளின் பிரதான பங்குதாரர் என்ற ரீதியில் தொழில் துறையில் கொடி கட்டிப் பறப்பவர் தம்மிக பெரேரா.

களுத்துறை மாவட்டத்தில் பிறந்து அளுத்கம மத்திய மகாவித்தியாலயத்திலும், பின்னர் ஹொரண தக்ஷிலா வித்தியாலயத்திலும் கல்வி பயின்ற தம்மிக பெரேரா இன்று பல நிறுவனங்களின் அதிபராக உயர்ந்துள்ளார்.

தேசிய வர்த்தகர்களைக் குறைத்து மதிப்பிடக்கூடாது என்று கூறும் தம்மிக பெரேரா, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அரசாங்கம் வழங்கும் சலுகைகள், வரிச்சலுகைகள் போன்றவற்றை உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்குத் தயக்கம் காட்டுவது ஏன்? என்று கேள்வி எழுப்புகின்றார்.

ரீஎன்எல் தொலைக்காட்சியில்தொழில் அதிபர் தம்மிக பெரேராவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும நிர வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலா வலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:* இலங்கையில் நீங்கள் இப்போது குறிப்பிடத்தக்க தொழில் அதிபராகத் திகழ்கின்றீர்கள். உங்களது நீண்ட பயணத்தின் தார்ப்பரியம் என்ன?

*பதில்:* எந்தவொரு நபரும் திறமையும் முன்னேற வேண்டும் என்ற அயராத உழைப்புமிருந்தால் வியாபார உலகின் முன்னணிக்கு வந்துவிடலாம் என்றே நான் எண்ணுகிறேன். இருந்தும், நான் கூறியவற்றுடன் புத்திக் கூர்மையும் அத்தியாவசியமாகும்.

*கேள்வி:* இலங்கையின் வியாபாரத துறையில் நீங்கள் முன்னேறி வந்த பாதையை சற்று நினைவு படுத்துவீர்களா?

*பதில்:* நான் களுத்துறை மாவட்டத்தில் பிறந்தவன். நான் வியாபாரத் துறையில் பிரவேசிக்க எனது தந்தையே உந்து சக்தியாக இருந்தார். எனது தந்தை ஒரு பலசரக்குக் கடையை நடத்தி வந்தார். அவருடன் நான் இணைந்ததால் எனது பல்கலைக்கழகப் படிப்பைத் தொடர முடியாமல் போய்விட்டது. அன்று தொடங்கிய எனது பயணம் படிப்படியான முன்னேற்றத்துடன் இன்று வரை தொடர்கின்றது.

*கேள்வி:* பாரிய அளவில் வியாபாரத்துறையில் முன்னேறியதற்கு நீங்கள் யாரை முன்னுதாரணமாகக் கருதுகின்றீர்கள்?.

*பதில்:* நான் வியாபாரத்தை சிறிய அளவிலேயே ஆரம்பிப்பேன். இரண்டு மூன்று வருடங்களில் அவ்வியாபாரத் துறை ஸ்திரத்தன்மை பெற்றுவிடும். அதன் பின்னர்தான் முதலீட்டை அதிகரிப்பேன். இதனால்தான் இத் துறையை நுணுக்கமாக அறிந்து கொள்ள முடிவதுடன் அத்துறையின தெளிவு, அழிவுகளை அறிந்து கொள்ளவும் முடியும். இவ்வாறு ஆரம்பிப்பதால்தான் எனது சகல வியாபாரங்களும் அபிவிருத்தியடைந்தன.

*கேள்வி:* இலங்கையின் வியாபாரத்துறையிலிருக்கும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது என்ன எண்ணுவீர்கள்?

*பதில்:* உள்ளூர், வெளியூர் முதலீட்டாளர்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது உள்ளூர் முதலீட்டாளர்கள் மீது அனுதாபம் ஏற்படும். இந்த இரு வகையான முதலீட்டாளர்களையும் அரசாங்கம் அணுகும்முறை வியப்பானது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சலுகைகள், வரிச்சலுகைகள் வழங்கப்படுகின்றன. இவைபெதுவும் தேசிய முதலீட்டாளர்களுக்கு இல்லை. நாம் பெரும் சிரமத்துடன் முன்னேற வேண்டியுள்ளது.

*கேள்வி:* நீங்கள் தேசிய அபிவிருத்தி வங்கியின் முக்கிய பங்குதாரர். பேன் ஏஷியா வங்கயின் பணிப்பாளர், வியாபாரி என்ற ரீதியில் நீங்கள் வங்கித்துறையில் மாற்றங்கள் கொண்டு வரவேண்டும் என்று எண்ணுகின்றீர்களா?

*பதில்:* மாற்றம் வரவேண்டும். மூன்றாம் உலகநாடு என்ற வகையில் எமக்கு சட்டங்கள் குறுக்கே நிற்கின்றன. இதுதான் எமது முக்கிய பிரச்சினை. சிங்கப்பூர் போன்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது இலங்கையில் உள்ள வங்கி வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கல் வாங்கல்களில் அதிக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. எந்தவொரு நபரும் வங்கிகளில் கடனைப் பெற்று அதைத் திருப்பிச் செலுத்தாமல் இருக்க முடியும். சிங்கப்பூர் வங்கிகளைப் போல் இலங்கை வங்கிகளுக்கும் சட்டரீதியான பாதுகாப்பு இருந்தால் எமக்கும் குறைந்த வட்டிக்கு கடன் வாங்க முடியும்.

*கேள்வி:* தேசிய மின்சார விநியோகத்துக்கு நீ மின்சாரத்தை வழங்குபவராகவும் இருக்கின்றீர்கள். தனியார் மின் உற்பத்தித்துறை குறித்து எதுவும் கூறமுடியுமா?

*பதில்:* இலங்கையின் தொழில் துறை வளர்ச்சிக்கு மின்சக்தி மிக முக்கியமாகும். மின்சக்தி மீதே 50சதவிதமான பொருள் உற்பத்தி தங்கியிருக்கின்றது.

மின்சக்தி இலங்கைக்கு மிக முக்கியமானது. இலங்யையில் மின் பாவனையாளர்களின் மின் கட்டணங்களைப்போல் தனியார் மின் உற்பத்தியாளர்களுக்கும் மின் விநியோகத்துக்கு நல்ல விலை கிடைக்கின்றது. இதன் காரணமாகப் பலர் மின் உற்பத்தித்துறையில் ஆர்வம் காட்டுகின்றனர்.

-இவ்வாறு கூறினார் தம்மிக பெரேரா. ★

# கலைப் பணியின் எழுச்சி வடிவமே திருமறைக் கலாமன்ற அமைதி நிகழ்வு

## அதன் இயக்குநர் விளக்கம்

யாழ்ப்பாணம்,மே23

அமைதியை வலியுறுத்தி திருமறைக்கலாமன்றம் நீண்ட காலமாக ஆற்றிவரும் கலைப்பணியின் ஒருங்கிணைந்த எழுச்சி வடிவமே அண்மையில் நடத்தப்பட்ட மூவினக் கலைஞர்கள் கலந்துகொண்ட அமைதிக்கான நிகழ்வுகளாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட் தந்தை பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார்.

சமீபத்தில் மன்றக் கலைத்தூது மணிமண்டபத்தில் இடம்பெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மன்றத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட கலைமாநாடு தொடர்பில் எழுந்துள்ள கருத்துக்கள் தொடர்பாக அது விளக்கப்பட்டது.

அங்கு தெரிவிக்கப்பட்டதாவது:-

கடந்த வாரம் யாழ்நகரில் எம்மால் நடத்தப்பட்ட கலாசார நிகழ்வுகள், திருமறைக் கலாமன்றம் சுமந்த சுமார் 15 வருடங்களாக ஆற்றிவருகின்ற அமைதிக்கான கலைப்பணியின் ஒருங்கிணைந்த எழுச்சி வடிவமாகும். இது எம்மை நாம் மீட்டுப்பார்க்கின்ற ஒரு நிலையுமாகும்.

அமைதியை வலியுறுத்துகின்ற எமது கலைநிகழ்வுகள் கடந்த 1990ஆம் ஆண்டு முதலாகவே தென் பகுதியில் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன. கிளாலி கடல் ஊடாக வள்ளத்திலும், திருகோணமலைக்கு கப்பலிலும் இன்று ஏ-9 ஊடாகவும் எமது சின்னஞ் சிறு கலைஞர்கள் தென்பகுதிக்குச் சென்று நிகழ்த்திக் காட்டிய அமைதியை வலியுறுத்தும் கலைவடிவங்கள் ஏராளமானவை.

1995ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து எமது கலைச் செயற்பாடுகள் அங்கு தீவிரமாக்கப்பட்டன. ஜே.வி.பி., சிஹல உறுமய மற்றும் அதுபோன்ற இனவாத சக்திகளின் கடுமையான அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் எமது கலைஞர்கள் ஆற்றிய பெரும் பணியை தமிழ் மக்களும் அவர்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளும் நன்கு அறிவர்.

தென்னிலங்கைப் பகுதியிலும் மற்றும் பிரதேசங்களிலும் 'சமாதான வலயங்களை' உருவாக்கி இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வை வலுப்படுத்துவதில் எமது மன்றம் எடுத்துக் கொண்ட முயற்சி மகத்தானது.

போருக்கான காரணங்களை அறிந்துகொள்ளாமல் அதனை நிறுத்தி விடமுடியாது. அந்தவகையில், தமிழ் மக்களின் போராட்ட நியாயங்களை தென்னிலங்கை மக்களிடையே எடுத்துச்சென்று கலைவடிவங்களின் மூலம் ஆற்றுகை செய்தோம். இதனால், பெரும்பாலான சிங்கள மக்களின் மனதில் விதைக்கப்பட்டிருந்த 'இனவாத சிந்தனைகளையும், விடுதலைப் புலிகள் குறித்த தப்பான எண்ணக் கருக்களையும் நீக்கி அவர்களை தெளிவு பெற வைக்க முடிந்தது.

இந்த நிகழ்வுகளின் ஒருங்கிணைக்கப்பட்ட எழுச்சி வடிவமாகவே கடந்த வாரம் யாழ் நகரில் இடம்பெற்ற கலை மாநாடு அமைந்தது. சுமார் ஒரு வருட காலமாகத் திட்டமிடப்பட்டு பெரும் எடுப்பில் இந்தவிழா நடத்தி முடிக்கப்பட்டது.

அந்த விழாவிற்காக நாம் தென் பகுதிச் சிறுவர்களை யாழ்ப்பாணம் அழைத்துவர முற்பட்டோம். அப்போது "யாழ்ப்பாணத்தில் புலிகள் ஆட்களை வெட்டுகிறார்கள், சிறுவர்களை பிடிக்கிறார்கள், நாம் எப்படி அங்கு பிள்ளைகளை அனுப்புவது" என்று தென்பகுதிப் பெற்றோர் எம்மிடம் தெரிவித்தனர். நாங்கள் இங்குள்ள உண்மை நிலையை எடுத்துக்கூறி, அவர்களுக்கு உத்தரவாதமளித்து இங்கு அழைத்து வந்தோம். தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள உண்மை நிலையை அவர்களே நேரடியாக அறிந்து சென்றுள்ளனர். அதுமட்டுமன்றி, எமது கலை நிகழ்வுகளில் கலந்துகொண்ட புலிகளின் பிரதிநிதிகளுடனும் அவர்கள் கலந்துரையாடிச் சென்றுள்ளனர்.

நிலைமை இவ்வாறு இருக்க, அண்மையில் மாணவர் அமைப்பென்று கூறிக்கொள்ளும் ஓர் ஒன்றியம் 'சமாதானப் பேரணிகள்' தேவையில்லை என்ற தொனியில் ஓர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. "சமாதானத்தின் மீது விடுதலைப் புலிகள் கொண்டுள்ள பற்று யாழ். மக்களுக்குத் தெரியும்" என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. உண்மையில் குறிப்பிட்ட ஒன்றியம் வெளியிட்ட அறிக்கை, எமது மன்றத்துக்குரிய விமர்சனமா என்பது தெளிவாகக கூறப்படவில்லை. எவ்வாறாயினும், நாகரிகம் மிக்க யாழ்ப்பாணச் சமூகத்தை அந்த அறிக்கையில் பிரயோகிக்கப்பட்டிருந்த சில வார்த்தைப் பிரயோகங்கள் வேதனைப்படுத்தியிருக்கும் என்று துணிந்து கூறலாம்.

இறுதியாக, "அமைதிக்கான கலைப்பணிகளை தொடர்ச்சியாக ஆற்றுகின்ற தன்மையும், அது குறித்துப பேசுகின்ற தகுதியும் திருமறைக் கலாமன்றத்துக்கே உரியது" என்று விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை கூறியிருப்பதனை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானது எனக் கருதுகிறோம் - இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (மு-ஓ)





சுயதொழில் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் பகவான் யாழ். ஸ்ரீ சத்யசாயி சேவா சமித்தியில் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த யுவதிகளுக்கு ஆறுமாதகாலம் தையல் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியைப் பூர்த்திசெய்த யுவதி ஒருவருக்கு நிலைய செயலாளர் சான்றிதழ் வழங்குவதையும், பயிற்சி ஆசிரியை மற்றும் பயிற்சிபெற்ற யுவதிகளையும் படங்களில் காணலாம். (ஐ)

நெல்லியடி தடங்கன் புளியடி முருகப்பெருமானின்
தலைமைத் தொண்டரும்
சிறப்புத் திருமணவாழ்வில்
ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுபவருமாகிய
திரு. பொ.கதிரமலை திருமதி க.சிவக்கொழுந்து
தம்பதியினரிடம்

**நல்லாசி பெறும் வைபவம்**

இடம்: நெல்லை முருகன் திருமண மண்டபம்
காலம்: நிறைவுத்தினமாகிய 24.05.2003 சனிக்கிழமை பி.ப. 3.00மணி

நிகழ்ச்சி நிரல்

தலைமையுரை: திரு. ஆ.சிவநாதன்
(ஆசிரியர், நெல்லியடி மகாவித்தியாலயம்)
வாழ்த்துரைகள்: பேராசிரியர் அ.சண்முகதாஸ்
(தமிழ்த்துறைத் தலைவர், யாழ் பல்கலைக்கழகம்)
நல்வாங்குழல் இசைக்கச்சேரி
பிரபல நாதஸ்வர வித்துவான V.K. பஞ்சமூர்த்தி குழுவினரின்
பக்கவாத்தியங்கள் சகிதம் இடம்பெறும்.

பட்டிமண்டபம்

இன்றைய தமிழ் சமூகத்தில் இல்வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள்

| இந்து தர்மத்தை பேணுகின்றார்களா? | இந்து தர்மத்தைப் பேணவில்லையா? |
|---|---|
| திரு. S.செந்தூர்ச்செல்வன் | திரு. T.முகுந்தன் |
| திரு. L.துஷிகரன் | திரு. T.தயாபரன் |
| திரு. T.கருணாகரன் | திரு. N.ஐங்கரன் |

நடுவர் : சிவநெறிச் செல்வர் இரா.செல்வவடிவேல்.

குறிப்பு: விழா நாயகர்களின் அன்புக்குரியவர்கள் அனைவரும் குடும்ப சமேதரராக வருகை தந்து விழா நாயகர்களிடம் ஆசிபெற வேண்டுமென அன்புடன் அழைக்கின்றோம்.

- விழா அமைப்பாளர்கள்.

(18309)


# மாறிவரும் சூழலுக்கு ஏற்ப அபிவிருத்தித் திட்டம் தேவை

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே23

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப குடாநாட்டின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புத திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ் அரச அதிபர் செ.பத்மநாதன்.

நியாப் திட்டத்தின் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் ஆகியவற்றினை ஒழுங்குபடுத்துவதற்கான துரித மதிப்பீட்டுக் குழுவின் பயிற்சிப்பட்டறை நேற்று யாழ் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வவுனியா வளாக வணிக பீடாதிபதி இந்நதகுமாரின் நெறிப்படுத்தலில நடைபெற்ற இந்தப் பயிற்சிப்பட்டறையில் அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது :-

கடந்த 20 வருடங்களாக இங்கு நடைபெற்ற யுத்தத்தினால் எமது மாவட்டத்தின் பல துறைகளும் சீரழிந்த நிலையில் உள்ளன.

அவற்றினை அபிவிருத்தி செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு அத்துறை சார்ந்தவர்களின் கைகளில் தான் உண்டு.

யாழ். மாவட்டத்தில் நீருக்கான தேவையும்,அதனுடைய பயன்பாடு பற்றியும் நீண்டகாலமாக அறிஞர்களாலும்,அத்துறை சார்ந்த வல்லுநர்களாலும் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

எமது மாவட்டத்திற்கான நீர்ப்பாசன நடைமுறைகள் மற்றும் குடிதண்ணீர் விநியோக நடைமுறைகள் எவ்வாறு காணப்பட வேண்டும் என இத்துறையில நிபுணத்துவம் வாய்ந்தவர்களால் பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

ஆனால்,இங்கு நீண்டகாலமாக இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால அவற்றிற்கு செயல் வடிவம் கொடுக்க முடியாத நிலை காணப்பட்டது.

அது மட்டுமல்லாது இந்த யுத்த சூழ்நிலைகளால் நன்னீரை சேமித்து வைக்கக்கூடிய குளங்கள், உவர் தடுப்புஅணைகள் மற்றும் கிணறுகள் என்பன சீரழிந்த நிலையில் காணப்படுகின்றமையால், இந்த நிலைமை மேலும் மோசமாகிவிட்டது.

பாதிக்கப்பட்ட இத்துறைகளை மீளக்கட்டியெழுப்புவதன் மூலம் எதிர்காலத்தில் மக்களுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

இலங்கையிலும்,உலகளாவிய ரீதியிலும் ஏற்படுகின்ற அபிவிருத்தித் தன்மைக்கேற்ப இந்தப் புனரமைப்பு நடவடிக்கைகளைக் கொண்டு செல்ல வேண்டுமா என்ற கருத்து எம்மத்தியில் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், மீளக் கட்டியெழுப்புவதிலும்பார்க்க இன்றைய தேவைக்கேற்ப நவீன தொழில் நுட்ப அடிப்படையில் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அதனடிப்படையில் நியாப் திட்டம் என்பது இதில் உருவாகிய ஒரு புனரமைப்புத் திட்டம் மாத்திரமே. இந்தத் திட்டங்களை சீராக நடைமுறைப்படுத்தும் போது பல புதிய திட்டங்கள் உருவாகும்.

எதிர்காலத்தில் நீர்ப்பாசனத் துறை மட்டுமல்லாது சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற 'பல்வேறு திட்டங்களை நாம் நியாப் திட்டத்தின் கீழ் முன்னெடுத்துச் செல்ல இருக்கிறோம்.

யாழ் குடாநாட்டிற்கான நியாப் திட்டத்தினை அமுல்படுத்தும் போது தொழில்நுட்பவியலாளர்களும், அறிஞர்களும், பயனாளிகளும் நல்லதோர் அடித்தளத்தினை அமைக்க வேண்டும்.

இன்று அமைக்கப்படும் அத்திவாரம் இந்த மாவட்டத்தில் செயற்படுத்த இருக்கின்ற சகல அபிவிருத்தி மற்றும் புனரமைப்புத் திட்டங்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்றார்.

இப்பயிற்சிப் பட்டறையில் தமிழ்ப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நியாப் திட்ட முகாமையாளர் எஸ். இராமநாதன் மற்றும் உயர் அதிகாரிகள், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் அத்துறைசார்ந்த நிபுணர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ-5)


அகலவை எட்டில் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையில்

**கௌரி அழகுமாடம்**

தமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றது.

- அழகுக்கு மெருகூட்டும் அழகுசாதனப் பொருள்கள்.
- அழகு டிசைன்களில் கண்கவர் கவரிங் நகைகள்.
- இல்லத்தரசிகளின் எழில்மிகு எவர்சில்வர் பொருள்கள்.
- பிளாஸ்ரிக் பொருள்கள்.
- பல டிசைன்களில் கிளாஸ்வகைகள்.
- தையல் உபகரணங்கள்.
- பாடசாலை உபகரணங்கள்.
- சூட்கேஸ் மற்றும் பாக்(Bag) வகைகள்.

இன்னும் பல! அவற்றை மொத்தமாக பெற்றுக்கொள்வதற்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

கௌரி அழகுமாடம்
316, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(18321)


### எண்மரிடம் ரூ.26ஆயிரம் அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,மே23

அனுமதி இன்றி சாராயம் விற்பனை செய்தமை மற்றும் கசிப்பு வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் எண்மருக்கு யாழ்.நீதிமன்றம் 26 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

அகதிமுகாம்,கொக்குவில் மேற்கைச்சேர்ந்த கந்தையா சுப்பையா என்பவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

நாச்சிமார்கோவிலடியைச் சேர்ந்த சுப்பையா குணரத்தினம்,111/2 கோவில் வீதி, நல்லூரைச் சேர்ந்த நாகலிங்கம் கமலராஜா, யாழ். லோடஸ் வீதியைச் சேர்ந்த சின்னராசா தவராசா, 687/29 ஓட்டுமடத்தைச் சேர்ந்த சுப்பையா கந்தசாமி மற்றும் -

இராசபாதை5 வீதி, கோப்பாயைச சேர்ந்த சிவஞானம் சாந்தரூபன், ஐயனார் வீதி சுதுமலையைச் சேர்ந்த மாணிக்கம் தவராசா, அல்லின் வீதி, காரைநகரைச் சேர்ந்த சண்முகம் சிவராசா ஆகிய எழுவரையும் தலா ஆயிரம் ரூபா தண்டப்பணமும் ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் - யாழ்.நீதிமன்ற நீதவான் இ.த.விக்கினராஜா உத்தரவிட்டுள்ளார். (எ-5)

### சிகிச்சை பெற வழியின்றி நோயாளர் அவதி

சண்டிலிப்பாய்,மே23

இணுவில் அரசினர் வைத்திய சாலை வாரத்தில் மூன்று தினங்கள் மட்டும் இயங்கி வருவதால் இங்கு சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வாரத்தில செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் இங்கு பணியாற்றி வரும் வைத்திய அதிகாரி திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களிலும் உடுவில் அரசினர் வைத்தியசாலைக்கு சென்று பதில் கடமையாற்றி வருகிறார். (எ-135)

### கசிப்பு வழக்கில் 6 மாத கடூழியச் சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம்,மே23

கோடா மற்றும் கசிப்பு வைத்திருந்த ஒருவருக்கு யாழ்நீதிமன்றம் 6மாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்ததுடன், 50 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

392, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவகுரும்பிள்ளை கிருஷ்ணா என்பவருக்கே யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்கினராஜா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்

குறிப்பிட்ட நபர் தண்டப்பணத்தை நீதிமன்றுக்குச் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் 6மாத சிறைத்தண்டனை வழங்கப்படும் என்றும் - நீதிவான் உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.


**COMPUTER COURSES**


New Batches Start on
Batch 1 :25.05.2003
Batch 2 :28.05.2003
Batch 3 :14.06.2003
at 10.00 A.M



உங்கள் முயற்சிக்கு....



இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்



- Diploma in Computer Programming
- Diploma in Java Programming
- Diploma in Visual C Programming
- Diploma in Visual Basic Programming
- Diploma in Information Technology

AN INTERNATIONALLY RECOGNIZED CERTIFICATE COURSE IN COMPUTERIZED ACCOUNTING

NEXT GENERATION

ARE YOU PLANNING TO STUDY IN U.K!
ARE YOU WILLING TO GET EMPLOYMENT ABROAD!
ARE YOU ANXIOUS TO GET FOREIGN SCHOLARSHIP AND TRAINING!

**IELTS**

International English Language Testing System Opens the way Examination is held by British Council Colombo. Certificate is issued by the University of Cambridge, London.

- Diploma in MS Office
- Diploma in Internet Technology
- Diploma in Hardware Technology
- Diploma in Eng. Drawing & AutoCAD
- Diploma in Desk Top Publishing

Adobe PageMaker · Adobe Photoshop 07 · Adobe Premiere · Macromedia Flash · CorelDRAW · MS Word · MS Excel · MS Access · ORACLE 9i · Pascal

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

**INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )**

Head Office:
IIS, 100, Clock Tower Road, Jaffna
TP No: 021-2222831 Email: iis@sltnet.lk

Branches:
IIS, Nelliyady, Karaveddy
IIS, Main Road, Chankanai.

# அல்ஜீரியாவில் நேற்றுப் பூகம்பம்;

# 500 பேருக்கும் மேல் உயிரிழப்பு!

## வீடுகள் மற்றும் கட்டடங்கள் தகர்ந்து தரைமட்டமாகின!!

அல்ஜியர்ஸ்,மே23

**வட ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை பூகம்பம் ஏற்பட்டது. இந்தப் பூகம்பத்தால் வீடுகள், கட்டடங்கள் தகர்ந்து தரைமட்டமாகின. இடிபாடுகளுக்குள் சிக்கி 500 பேருக்கும் மேல் உயிரிழந்தனர். இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயருமென அஞ்சப்படுகிறது.**

இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 2 மணி அளவில் அல்ஜீரியாவைத் திடீரென்று பூகம்பம் தாக்கியது. அப்போது அல்ஜீரியாவில் மே21 ஆம் திகதி இரவு 7.45மணியாகும். தலைநகர் அல்ஜீரியாவில் மற்றும் வடபகுதியில் உள்ள நகரங்களில் பூகம்பம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 6.7 ஆகப் பதிவாகியிருந்தது. பூகம்பத்தால் ஏராளமான வீடுகளும், கட்டடங்களும் தகர்ந்து தரைமட்டமாகின. பூகம்பத்தின் பின்னர் நில அதிர்வு சுமார் அரை மணித்தியாலம் நீடித்தது. தலைநகர் அல்ஜியர்ஸிலிருந்து கிழக்கே 60கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள தெனியா நகர்ப்பகுதியை மையமாகக் கொண்டு நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது.

இந்த நில நடுக்கத்தால் குறைந்தது 538பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 4ஆயிரத்து 700பேர் வரை காயமடைந்துள்ளனர். பூகம்பம் ஏற்பட்டவுடன் அச்சத்தால் மாடிக் கட்டடங்களில் இருந்து உயிர்தப்ப வெளியே பாய்ந்தவர்கள் சிலர் உயிரிழந்ததாகவும்; பலர் காயமடைந்ததாகவும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்டட இடிபாடுகளுக்குள் ஆயிரக்கணக்கானவர்கள் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்கும் பணி முழுவீச்சில் இடம்பெற்று வருகிறது.

அல்ஜீரியாவில் 1954ஆம் ஆண்டு ஆயிரத்து 400பேரும், 1980ஆம் ஆண்டு 3ஆயிரம் பேரும் பூகம்பத்தால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



அல்ஜீரியாவில் பூகம்பத்தால் சேதமடைந்த ஓரிடம்.

## தொடர்ந்து புத்தகம் வாசிப்பதில் ஜேர்மன் மாணவிகள் சாதனை!

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பாடசாலை மாணவிகள் ஆறுபேர் நீண்ட நேரம் தொடர்ந்து உரத்து வாசிப்பதில் புதிய உலக சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

இந்த ஆறு மாணவிகளும் கடந்த வார இறுதியில் எட்டுப் புத்தகங்களை தொடர்ந்து உரத்து - இரண்டரை நாள்களாக - 61 மணித்தியாலங்கள் 16 நிமிடங்கள் வாசித்தனர்.

இதன்மூலம் கடந்த வருடம் இத்தாலிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒருவர் தொடர்ந்து ஒன்பது மணித்தியாலங்கள் வாசித்து ஏற்படுத்தியிருந்த உலக சாதனையை இந்த மாணவிகள் முறியடித்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளனர். இந்த ஆறு மாணவிகளும் பதினாறு வயது மட்டுமே நிரம்பியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆப்கான் இராணுவத்தினரை சுட்டுக்கொன்றது அமெ. படை!

### தவறுதலாக நேர்ந்ததாக விளக்கம்

காபூல்,மே23

ஆப்கானிஸ்தானில் தேசிய இராணுவத்தைச் சேர்ந்த நான்கு வீரர்களை அங்கு நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படையினர் சுட்டுக்கொன்று விட்டனர். இது தவறுதலாக நேர்ந்த ஒன்று

உலக அரங்கில்

என்று அமெரிக்கப் படையினர் விளக்கமளித்துள்ளனர்.

காபூலில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்புக்காக அமெரிக்க இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்தனர். அது தூதரகம் முன்பாக ஆப்கான தேசிய இராணுவத்தின் காவல் நிலை ஒன்று இருந்தது.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் தூதரகத்திலிருந்த அமெரிக்கப் படையினர் காவல்நிலை நோக்கிச் சுட்டதாகவும் - காவல் நிலையிலிருந்த தேசிய இராணுவத்தினர் பதிலுக்குத் திருப்பிச் சுட்டதாகவும் - கூறப்படுகிறது.

இம் மோதலிலேயே ஆப்கான் இராணுவத்தைச் சேர்ந்த 4பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானில் நிலைகொண்டுள்ள பன்னாட்டுப் படைகளின் பேச்சாளர் இச்சம்பவம் தொடர்பாகத் தெரிவித்ததாவது:-

காவல் நிலையத்தைக் கடந்து சென்ற கார் ஒன்றின் மீது ஆப்கான் இராணுவத்தினர் சந்தேகம் கொண்டனர். அதனால் அக்கார் மீது அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இந்நிலையில் தம்மீது தாக்குதல் நடத்தப்படுவதாக எண்ணி தூதரகத்தில் இருந்த அமெரிக்கப்படையினர் பதில் தாக்குதல் நடத்தினர் என்று அவர் தெரிவித்தார்.

ஆனால், ஆப்கான் உள்துறை அமைச்சரகம் கூறுகையில் -

காவல் நிலையத்துக்கு ஆயுதங்களை ஆப்கான் இராணுவத்தினர் கொண்டு வந்து இறக்கிய போது, தீவிரவாதிகள் என்று அவர்கள் மீது சந்தேகமடைந்து அச்சம் காரணமாக அமெரிக்கப் படையினர் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## முன்னாள் அமைச்சர் கொலை: கருணாநிதியின் மகன் கைது!

மதுரை,மே23

தமிழகத்தில் தி.மு.க. முன்னாள் அமைச்சர் தா.கிருஷ்ணன் வெட்டிக் கொல்லப்பட்டார். இது தொடர்பாக தி.மு.க.தலைவர் மு.கருணாநிதியின் மகன் மு.க.அழகிரியைத் தமிழகப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.



பொலீஸ் வாகனத்தில் மு.க.அழகிரி

நேற்றுமுன்தினம் அதிகாலை 4மணிக்கு மதுரை ரி.வி.எஸ்.நகரில் உள்ள மு.க.அழகிரியின் வீட்டுக்கு சுமார் 100 பொலீஸார் சென்றனர்.

'அழகிரியிடம் விசாரணை நடத்த வேண்டும். அவரை வெளியில் வரச் சொல்லுங்கள்' என்று அவர்கள் கூறினார்கள். அதிகாலை 4.30 மணிக்கு மு.க.அழகிரி வெளியில் வந்தார்.

இதுபற்றி தகவல் பரவியதும் தி.மு.கவினர் அழகிரி வீட்டுக்கு முன்பு குவிந்து கோஷமிட்டனர்.

'அழகிரியை வெளியில் அழைத்துச் செல்லவிடமாட்டோம்' என்று சிலர் ரகளையில் ஈடுபட்டனர். அவர்களை மு.க.அழகிரி சமரசம் செய்தார். தல்லாகுளம் பொலீஸ் நிலையத்துக்கு அழகிரி அழைத்து வரப்பட்டார். அவரிடம் ஒரு மணி நேரம் தனிப்படை பொலீஸார் விசாரணை நடத்தினார்கள்.

விசாரணை முடிந்ததும், தா.கிருஷ்ணன் கொலை தொடர்பாக கைது செய்வதாக மு.க.அழகிரியிடம் பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். இதைக் கேட்டதும் அவர் அதிர்ச்சி அடைந்தார்.

தா.கிருஷ்ணன் கொலைக்கும் எனக்கும் எந்தவித தொடர்புமில்லை என்றும் அழகிரி கூறினார். ஆனால், பொலீஸார் அதை ஏற்கவில்லை. அழகிரிமீது வழக்கு பதிவுசெய்யப்பட்டது. 'கொலையில் அழகிரிக்குத் தொடர்பு உள்ளது' என்பதை நிரூபிப்பதற்கு போதுமான ஆதாரங்கள் உள்ளன என்று உயர் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட மு.க.அழகிரி தற்போது திருச்சிச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் தி.மு.கவின் உள்கட்சித் தேர்தலைப் பொறுப்பேற்று நா.கிருஷ்ணன் நடத்தி வந்தார். இந்த 3 மாவட்டங்களிலும் அவருக்கு கணிசமான அளவுக்கு செல்வாக்கு இருந்தது.

இதனால், அவருக்கும் அவரது எதிர்ப்பாளர்களுக்கும் இடையே முன்பகை இருந்து வந்தது. சமீபத்தில் தனக்கு நெருக்கமானவர்களை அவர் முக்கிய பொறுப்புகளில் நியமித்தாராம். இதன் காரணமாகவே தா.கிருஷ்ணன் திட்டமிட்டு கொல்லப்பட்டுள்ளார் என்று தனிப்படை பொலீஸார் நடத்திய விசாரணைகளில் உறுதியானதாகக் கூறப்படுகிறது.

மதுரை உட்பட தென்மாவட்டங்களில் மு.க.அழகிரிக்கும் மற்றைய தி.மு.க.தலைவர்களுக்கும் இடையே செல்வாக்குப் போட்டி பலகாலமாகவே இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

### நெடுமாறன் உட்பட ஐந்து பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு

சென்னை,மே23

தமிழகத்தில் 'பொடா' சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் உள்ளிட்ட 5 பேருக்கு மே30 வரை காவல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை பொடா சிறப்பு நீதிமன்ற நீதிபதி எல்.ராஜேந்திரன் பிறப்பித்தார். சென்னை ஆனந்த் திரையரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக இவர்கள் கைதாகினர்.

## கொங்கோவில் இனக்கலவரம்!



கொங்கோ ஜனநாயக குடியரசில் இடம்பெற்று வரும் படுமோசமான இனக்கலவரத்தில் கொல்லப்பட்டவர்களில் இருவரது சடலங்கள் வீதியில் கிடப்பதை இடதுபுறம் உள்ள படத்திலும் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பான இடத்தைத் தேடிச் செல்வதை வலது புறம் உள்ள படத்திலும் காணலாம்.

ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசில் பெரும் இனக்கலவரம் மூண்டுள்ளது. அங்கு நிலை கொண்டுள்ள ஐ.நா. அமைதிப் படையின் கலவர அனர்த்தங்களைத் தடுக்க முடியாது திணறுவதாகக் கூறப்படுகிறது.

கொங்கோவின் வடகிழக்கே உள்ள பிரதேசமே இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் பாரம்பரியமாக மந்தை வளர்ப்பில் ஈடுபடும் ஹேமாஸ் இனத்தவருக்கும் விவசாயிகளை பெரும்பான்மையாகக் கொண்ட லென்டஸ் இனத்தவருக்கும் இடையே பல நூற்றாண்டுகளாகவே பகை நிலவி வருகிறது. இந்த இரு இனத்தவர்களுமே தற்போது மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பிரதேசத் தலைநகரான புனியாவின் வீதிகளிலிருந்து சுமார் முந்நூறு சடலங்களைத் தாம் மீட்டுள்ளதாக ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இனக்கலவரத்திலிருந்து உயிர்தப்ப ஆயிரக்கணக்கானவர்கள் அயல் நாடான உகண்டாவுக்குச் சென்று கொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாரிய இன ஒழிப்பு நடவடிக்கைகள் இடம்பெறச் சாத்தியம் உள்ளதாகவும் - கலவரத்தை அடக்க முடியாமல் அங்குள்ள ஐ.நா. அமைதிப் படையினர் திணறி வருவதாகவும் - கூறப்படுகிறது. (ஒ)

விஞ்ஞான பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## அறிவித்தல்

விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வு
(முதலாம் அரையாண்டு)
**2003 & 2003 A**

**மேற்படி தேர்வு 02-06-2003 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும். முன்னர் அறிவிக்கப்பட்டது போன்று 26.05.2003 ஆம் திகதி ஆரம்பமாகமாட்டாது.**

**மேற்படி தேர்வுக்கான நேர அட்டவணையை விஞ்ஞான பீட அறிவிப்பு பலகைகளில் பார்வையிடலாம்.**

**- பதிவாளர்** (சி-28038)



## LLIONAIR

**தினமும் யாழ். - கொழும்பு - யாழ்.**
சேவை

பாதுகாப்பான - சௌகரியமான
ஐரோப்பியநாட்டு (BRITISH) விமானத்தில்
பயணம் செய்வதற்கு,

**லயன்எயர்**
**# /-T, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி 021-2226026 HOTLINE : 0777382343
021-2226035 072401423

(C/28035)


## நூல்வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,மே23

கருணாகரனின் 'ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள்' எனும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புதுக்குடியிருப்பு, ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நிலாந்தன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். புலிகளின் மூத்த பிரமுகர் வே. பாலகுமாரன் நூலை வெளியிட்டு வைப்பார். (எ)

## முன்பள்ளி ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே23

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளை சனிக்கிழமையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை நல்லூர் முத்திரைச் சந்தையில் உள்ள முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சமூக செயற்பாட்டு மையம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

## விவசாய உதவி

சண்டிலிப்பாய்,மே23

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வைகாசி போக வெங்காயச் செய்கையில் ஈடுபடவிருக்கும் சங்க அங்கத்தவர்களுக்கு கடனுதவி வழங்கவுள்ளது.

இக்கடனைப்பெற விரும்புவோர் இம்மாத இறுதிக்குள் தங்கள் பிரிவு கிளை முகாமையாளர் ஊடாக விண்ணப்பிக் முடியும் என்று சங்க பொது முகாமையாளர் சு.வைரவநாதன் தெரிவித்துள்ளார். (ஒ-135)


### தவறிவிட்டது

**கையடக்க தொலைபேசி (0777 174939) 22-05-2003 இல் தட்டா தெருச் சந்திக்கும் கொக்குவில் மேற்குக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 692, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

T.P 2940 (18311)



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2650234 இருந்து
2666187 வரை
சீட்டிழுப்பு இல. 1402
திகதி 21.05.2003

**வெற்றி எண்கள்** போனஸ் எண்
**02 15 20 23 24** **31**

ஜக்பொட் பரிசு
**ரூபா.2,091,650/-** வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,091,650/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 100 | 10,000/- | 1,000,000/- |
| 3 | 5,029 | 500/- | 2,514,500/- |
| 2 | 83,956 | 20/- | 1,679,120/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 02ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 102,975 | 10/- | 1,029,750/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,323,370/-

**இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்**
**ரூபா. 2,888,200/-**

தொடர் இல. 3641802க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 மே 24ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2659359-0-06
2661890-6-23
2658247-0-78
2656953-7-65
2650926-2-33

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX OBM





## SHELL GAS கம்பனியின்
### விசேட விலைக்குறைப்பு சலுகை

**யாழ்.குடாநாட்டு விநியோகஸ்தர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் ஒரு நற்செய்தி!!**

SHELL GAS **சமையல் எரிவாயுப் பாவனையாளர்களுக்கு செல் காஸ் கம்பனியால் வெற்றுச் சிலிண்டர் ஒவ்வொன்றுக்கும் 300/= வீதம் கழிவு விலையிலும் காஸ் விலை 780/=இலும் வழங்கப்படுகின்றது. இதனை எம்மால் நியமனம் செய்யப்பட்ட முகவர் நிலையங் களிலும், எமது நிறுவனத்திலும் ஒரே நியம விலையில் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**இந்த அரிய சலுகையை 20.05.2003 தொடக்கம் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதையும் அறியத்தருகின்றோம். ஆகவே, இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.**

வெற்றுச் சிலிண்டர்
பழைய விலை 2150/= புதிய விலை 1850/=
மறு அறிவித்தல் வரை

செல் காஸ் 12.5
பழைய விலை 850/= புதிய விலை 780/=

## செல் காஸ்
(சமையல் எரிவாயு)

| | | | |
|---|---|---|---|
| 37.5 | Kg. | செல் காஸ் விலை | 2,500/= |
| 12.5 | Kg. | செல் காஸ் விலை | 780/= |
| 4.5 | Kg. | செல் காஸ் விலை | 200/= |

### நமது முகவர்கள் வருமாறு

01. சிற்றி ஏஜென்சி - ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
02. T.R.G. கொமினிக்கேசன் சென்ரர் - ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
03. ஹரணி காட்வெயர்ஸ் - ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
04. கரன் காட்வெயர்ஸ் - K.K.S. றோட், தட்டாதெரு.
05. லிங்கம் ஸ்ரோர் - நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
06. சிவன் ஸ்ரோர்ஸ் - பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
07. கஜமுகன் ஸ்ரோர்ஸ் - முத்திரைச் சந்தை, நல்லூர்.
08. விக்கி ஸ்ரோர்ஸ் - முடமாவடி, நல்லூர்.
09. ரட்ணா ஸ்ரோர்ஸ் - சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
10. பிருந்தா றேட்சென்ரர் - றக்கா றோட், யாழ்ப்பாணம்.
11. துளசி வர்த்தக நிலையம் - கொக்குவில்.
12. சிவா பிறதேர்ஸ் - திருநெல்வேலி.
13. சூரியா காட்வெயர்ஸ் - கலாசாலை வீதி, திருநெல்வேலி.
14. புகழ் ஸ்ரோர்ஸ் - சுன்னாகம்.
15. சிறி கணேசா ஸ்ரோர்ஸ் - சுன்னாகம்.
16. கதிர்காமசிங்கம் அன் சன்ஸ் - அளவெட்டி.
17. சுதர்சன் ஸ்ரோர்ஸ் - உரும்பிராய்.
18. நெல்லைக்குமரன் றேடேர்ஸ் - நெல்லியடி.
19. ஜெயகணேசா ஸ்ரோர்ஸ் - பருத்தித்துறை.
20. மதுசன் ஸ்ரோர்ஸ் - உடுப்பிட்டி.
21. லிங்கம் ஸ்ரோர் - தாவடி.
22. விதுஷா சுப்பர் மார்க்கட் - இணுவில்.
23. தினேஷ் பேக்கறி - மானிப்பாய்.
24. கலா நுஞ்சிதா ஸ்ரோர்ஸ் - வல்வெட்டித்துறை.
25. யுனிற்றி ஹாட்வெயார்ஸ் - சாவகச்சேரி.
26. சசிரேகா ஸ்ரோர்ஸ் - கல்வியங்காடு.
27. மாரிஅம்மன் மோட்டேர்ஸ் - கோப்பாய்.
28. அம்பாள் ஸ்ரோர்ஸ் - வட்டுக்கோட்டை.
29. தேவன் ஸ்ரோர்ஸ் - சுன்னாலை, கரவெட்டி.
30. மணியம் ஸ்ரோர்ஸ் - கொடிகாமம்.
31. கீர்த்தி ஸ்ரோர்ஸ் - நவிண்டில்.
32. கோபி கிருஷ்ணா ஸ்ரோர்ஸ் - வல்வெட்டித்துறை.
33. சண்முகா ஸ்ரோர்ஸ் - சாவகச்சேரி.
34. சர்மிளா கொமினிக்கேசன் - கந்தர்மடம்.
35. சிவன் ஸ்ரோர்ஸ் - கோண்டாவில்.
36. சித்திவிநாயகர் களஞ்சியம் - தொண்டமானாறு.
37. சபா றேடிங் மோட்டேஸ் - அச்சுவேலி.
38. சுதா கொமினிக்கேசன் - கொக்குவில்.
39. Macss, No.76, பஜார் வீதி, யாழ்ப்பாணம்.
40. நாதன் ஸ்ரோர்ஸ் - மல்லாகம்.
41. துஷி ஸ்ரோர்ஸ் - K.K.S. றோட், கொக்குவில்.

குறிப்பு: எம்மால் முகவர்கள் நியமிக்கப்படாத இடங்களுக்கு முகவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**S.V.MURUGESU**
**Distributors for Shell Gas**
154, Hospital Road,
Jaffna, Sri Lanka.
Phone: 2911, 2991

(18320)

## உடற்கல்வி மாணவ மன்ற சீட்டிழுப்பு முடிவுகள்

உடற்கல்வி மாணவ மன்றத்தால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு குலுக்கலில் வெற்றிபெற்ற இலக்கங்கள் பின்வருமாறு:-
முதலாம் பரிசுக்குரிய இலக்கம்- **5580** (தொலைக்காட்சிப் பெட்டி)
இரண்டாம் பரிசுக்குரிய இலக்கம்- **5543** (கையடக்கத் தொலைபேசி)
மூன்றாம் பரிசுக்குரிய இலக்கம்- **3518** (துவிச்சக்கர வண்டி)

**ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்**

1) 3745 2) 0605 3) 3865 4) 0030 5) 4673 6) 2624 7) 3534 8) 1702 9) 5366 10) 0542 (விளையாட்டு உபகரணங்கள்)

இந்த இலக்கங்களுக்குரிய பற்றுச் சீட்டுக்களை வைத்திருப்போர் தங்களுக்குரிய பரிசுப் பொருள்களை உடற்கல்வித்துறை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். அத்துடன் ஆதரவினை வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(18326) - உடற்கல்வி மாணவர் மன்றம்.

## உடனடி வேலை வாய்ப்பு

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உணவகத்திற்கு பின்வருவோர் உடன் தேவை.

* சமையல் ஆள் (உள்ளூர், Chinease)
* பரிமாறுபவா (Waiter)
* கொத்து ரொட்டி போடுபவர்

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்பு நேரம்: பி.ப. 2.00 - 4.00 p.m.

**சண்ஜெய பூட்லண்ட்**
414,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(18224)

## பாடசாலை அதிபர்களுடனான சந்திப்பு

TSSA எனப்படும் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் லண்டனில் கடந்த 12 வருடங்களாக செயற்படுகின்றது. 1992 இல் யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (JSSA- UK) என பன்னிரண்டு பழைய மாணவர் சங்கங்களுடன் தொடங்கி 50 பழைய மாணவர் சங்கங்களைக்கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. யாழ். மாவட்ட பாடசாலைகளின் விளையாட்டுத் துறையை சிறப்பானதாக்க அதிபர்களுடன் சேர்ந்து செயற்பட விரும்புகின்றனர். சங்கத்தின் இந்த ஆண்டின் தலைவரான திரு. எஸ். ஸ்ரீரஞ்சன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இவ்வேளையில் அதிபர்கள் எல்லோரையும் சந்திக்கும் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதிபர்கள் அல்லது அவர்களின் உதவியாளர்கள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**இடம்: கொக்குவில் இந்துக்கல்லூரி**
**காலம்: 28.05.2003 புதன்கிழமை பி.ப.4.00மணி**
**தொடர்புகளுக்கு: தொ.பெ.இல.222 3754**
லண்டன்:செயலாளர்,13 Arcus Road, Bromley, Kent BR1-4NN (UK)
TEL.:020 8698 2938

அ.பஞ்சலிங்கம்
(அமைப்பாளர்)

(சி/28042)

## கீதப் போட்டி

லண்டனில்(பெரிய பிரித்தானியா) கடந்த 12 ஆண்டுகளாக இயங்கிவரும் TSSA எனப்படுகின்ற தமிழ்பாடசாலைகள் விளையாட்டுச்சங்கத்திற்கு அவர்களின் நிகழ்ச்சிகளின்போது ராகத்துடன் பாடக் கூடிய கீதம் தேவைப்படுகிறது. 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் நாள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 12 விளையாட்டுப் பிரியர்களினால் யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம்(JSSA - UK) என ஆரம்பிக்கப்பட்டு 12 தமிழ்ப் பழைய மாணவர் சங்கங்களுடன் முதலாவது விளையாட்டு விழாவை நடத்தினார்கள். இன்று இலங்கை முழுவதையும் சேர்ந்த 50 பழைய மாணவர் சங்கங்களுடன் ஆண்டுதோறும் இரண்டு பெரிய விளையாட்டு விழாக்களை நடத்தி வருகிறார்கள். ஜனநாயக முறைப்படி ஆண்டுதோறும் தெரிவுசெய்யப்படும் நிர்வாகம் விளையாட்டு விழாக்களை திறம்பட நடத்துவதுடன், தங்களின் பாடசாலைகளின் விளையாட்டு முன்னேற்றத்துக்கும் உதவி வருகிறார்கள்.

மேற்படி கருத்துக்கள் வெளிப்படத் தக்கதாகவும், சுலபமாகப் பாடக்கூடிய ராகத்துடன் கூடியதாகவும் கீதம் அமைய வேண்டும். தெரிவுசெய்யப்படும் பாடலை இயற்றுபவருக்கு ரூபா பத்தாயிரம்(10,000) பரிசளிக்கப்படும். தெரிவுசெய்யப்படுபவர் பாடசாலை ஒன்றின் ஆசிரியராகவோ அல்லது மாணவனாகவோ இருக்கும் பட்சத்தில் மேலதிகமாக ரூபாய் 2,500 வழங்கப்படும்.

இறுதி முடிவு TSSA செயற்குழுவினால் எடுக்கப்பட்டு, வெற்றிபெறுபவர்க்கு அறிவிக்கப்படுவதுடன் பத்திரிகை மூலமும் வெளிப்படுத்தப்படும்.

**போட்டி முடிவு திகதி: ஜூலை 1ஆம் திகதி 2003**
**தொடர்புகளுக்கு: அ.பஞ்சலிங்கம், கோப்பாய் வீதி , உரும்பிராய்.**

(சி-28041)

## வேணுகா தொலைத்தொடர்பகம்

*இல. 964, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்*

எமது நிறுவன வளர்ச்சிக்காக சர்வதேச அழைப்புகளுக்கு இன்ரநெற் மூலம் பேசுவதற்கு ரூபா 10. இன்ரநெற் மூலம் வெளிநாட்டவர்கள் பார்த்த வண்ணம் கதைப்பதற்கான வசதிகளும் செய்துகொடுக்கப்படும். அத்துடன் வீடியோ படக்கொப்பி வாடகைக்கு கொடுக்கப்படும். போட்டோ கொப்பி , கொம்பியூட்டர் பிறிண்டிங், பக்ஸ் வசதியும் செய்து கொடுக்கப்படும்.

தொ. பே. இல.
021 222 2541, 021 222 5076
021 222 2845, 021 222 5689
0777 738 337

இவ்வண்ணம்
இ.சிறிதரன்
*(உரிமையாளர்)*

(சி-28040)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை முதலாம் வருட ஆங்கில நெறியைச் சேர்ந்த *செல்வி க. வாசுகியின்* தந்தையார்


**அமரர் க.கனகசபாபதி**

14.04.2003 இல் இயற்கை மரணம் அடைந்ததையிட்டு அன்னாரது குடும்பத்திற்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

கலாசாலைச் சமூகம்.
பலாலி ஆசிரியகலாசாலை

(18306)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை மாணவன் (10B)
மகேந்திரன் அஜந்தன்
(டச்றோட் மானிப்பாய்)

19.05.2003 திங்களன்று அகாலமரணமடைந்த செய்தி அறிந்து ஆறாத்துயர் அடைகின்றோம்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்.
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*யா/ மானிப்பாய் மெமோறியல்,*
*ஆங்கில பாடசாலை,*
*மானிப்பாய்.*

(18329) - மெமோறியல் குடும்பம்.

## உடதும்பறையில் கைதான இருவருக்கும் விளக்கமறியல்

உடதும்பறை பிரதேசத்தில் குடி தண்ணீர் போத்தலில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்றிலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாக கைதாகிய இருவர் இம்மாதம் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

தெல்தெனிய நீதிவான் செல்வி இனோகா ரணசிங்க முன்னிலையில் கைதான இருவரும் ஆஜர் செய்யப்பட்டனர். மொஹமட் உவைஸ் உடையார (வயது-60), அப்துல் றஸாக் மொகமட் றஸாக் (வயது-30)ஆகிய இந்த இருவரும் இம்மாதம் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

## இடியன் துவக்கு வெடித்து குடும்பஸ்தர் காயம்!

*கிளிநொச்சி,மே23*

இடியன் துவக்கு வெடித்து குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முத்தையன்கட்டு, ஜீவநகரைச் சேர்ந்த ஆவிக்கினேஸ்வரன் (வயது21) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் காட்டுக்குச் சென்ற இவர் மரம் ஒன்றைக் குறிபார்த்துச் சுட்ட போதே இடியன் துவக்கு பிரிந்து வெடித்து அவர் படுகாயமடைந்தார் எனக்கூறப்பட்டது. (ம-8)

## கஞ்சா வைத்திருந்த நபருக்கு ரூ. 13 ஆயிரம் அபராதம் விதிப்பு

*யாழ்ப்பாணம்,மே23*

கஞ்சாவைத்திருந்த நபர் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் 13 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

22 கிராம், 600 மில்லிக்கிராம் கஞ்சா வைத்திருந்த கந்தப்பச்செட்டியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசதுரை சுதாகரன் என்பவரையே 10 ஆயிரம் தண்டப்பணமும், 3 ஆயிரம் தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (எ-5)

## உடன் தேவை

பில்கிளாக் 45 வயதிற்கு மேற்பட்டோர்
**சரஸ்வதி விலாஸ்**
195-57, கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம். (18329)

## நாகம்ஸ் சுன்னாகம்

மாதவன், ஸ்நேகா, சார்லி, வையாபுரி நடித்த
**என்னவளே** (ரீலஸ்)
இனிய பாடல்கள் நிறைந்த படம்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு விஷேடகாட்சி 7.00 (பு.நே.)
(18201)

## ராஜா யாழ்ப்பாணம்

3 ஆவது வாரம்
விஜய், மீராஜஸ்மின் ,கருணாஸ்



புதிய கீதை
காட்சிகள் :10.30, 2.30, 6.30,
சனி,ஞாயிறு: 10.30,2.30, 6.30, 9.30
(C/27626)

## லஷ்சுமி சினிமா

(இணுவில்)
நடிகர் திலகம் சிவாஜிகணேசன், பத்மினி
மற்றும் பலர் நடிப்பில்
**தில்லானா மோகனாம்பாள்**
11.00, 3.00, 6.30 (பு.நேரம்)
(18229)

## லிபேட்டி அச்சுவேலி

விஜய், ரம்பா நடித்த



என்றென்றும் காதல் (ரீலஸ்)
11.00, 3.00, 7.00 (பு.நே.)

## நிறைஞ்சனாஸ்

ரஜனி,ரம்பா, சௌந்தர்யா நடித்த
**அருணாச்சலம்** (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
**CASTAWAY**

# அனுமதியின்றி மணல் ஏற்றியோருக்குத் தண்டம்

அனுமதிப்பத்திரம் இன்றி உழவு இயந்திரத்தில் மணல் எடுத்துச் சென்ற நால்வருக்கு யாழ்.நீதிமன்றம் 2 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

நாகலிங்கம் பாக்கியநாதன், தம்பிமுத்து ரவி, கணபதிப்பிள்ளை யோகேஸ்வரன், சேனாதி சந்திரசேனா ஆகிய நால்வருக்குமே தலா 500 ரூபா படி தண்டம் விதிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட மணலை யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டடப் பணிகளுக்கு வைத்தியசாலைப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் ஒப்படைக்குமாறு நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (ம-8)

# மரண அறிவித்தல்கள்

## பஸ்ரியாம்பிள்ளை இம்மனுவேல் மரியநாயகம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர் பஸ்ரியாம்பிள்ளை இம்மனுவேல் மரியநாயகம் கனடா - ரொறன்ரோவில் 20.05.2003 இல் காலமானார்.

அன்னார் நாரந்தனை பஸ்ரியாம்பிள்ளை - எலிசபேத் தம்பதிகளின் ஏக புதல்வனும் திருமதி றெஜீனா கிறிஸ்ரியன், திருமதி தெரேசா அல்பொன்சஸ்சின் அருமைச் சகோதரனும் பண்டத்தரிப்பைச் சேர்ந்த பிலோமினா பிளசத்தின் அன்புக் கணவரும் அருள்சகோதரி மேரிலூசிலா கிறிஸ்தோப்பிள்ளை, திருமதி அலெக்ஸ்சான்றா அமிர்தநாயகம், திருமதி கிறிஸரீன் பயஸ் ஆகியோரின் மைத்துனரும் கமிலஸ் மனோ, லூமென்கிறிஸ்ரி பெனோ, மரியன் யோசவ் கானோ, திருமதி லைசா ஜெறல்டின் கருணாகரனின் பாசமிகு தந்தையும் ஜஸ்மின், யுஸ்ரீனா ஜெறெமி, ரெசா, அபிகாய், அலெக்ஸின் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னார் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் பதினைந்து ஆண்டுகளும் நைஜீரியாவில் ஐந்து ஆண்டுகளும் சம்பியாவில் இருபத்தைந்து ஆண்டுகளும் ஆசிரியராகப் பணியாற்றி இளைப்பாறியபின் குடும்பத்தவருடன் கனடாவில் ரொறன்ரோவில் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக வாழ்ந்துகொண்டிருந்தார்.

இவரின் இறுதிச் சடங்குகள் ரொறன்ரோ - கனடாவில் 24.05.2003 இல் இடம்பெறும். இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Mrs.Blossm
Marianayagam Family,
Unit 209,3 Glenburn Ave.,
Toronto ONT, M4B.2W8
CANADA. (18322)

தகவல்:
Mrs.Alex
Amirthanayagam,
109,Station Rd.,Jaffna.

## திருமதி அம்பலவாணர் செல்வரத்தினம்

வட்டுக்கோட்டை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பலவாணர் செல்வரத்தினம் அவர்கள் 20.05.2003 செவ்வாய்க் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு அம்பலவாணரின் (S.K.C.W.E.) அன்பு மனைவியும் சண்முகராஜா (ஓய்வுபெற்ற அதிகாரி S.L.T.), சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் நீர்ப்பாசனத் திணைக்களம்), தவமணி, கிருஷ்ணர்(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், விவசாயத் திணைக்களம்), மனோன்மணி, பூபாலராஜா(கனடா), சரஸ்வதி, விக்னராஜா (S.L.T யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (22.05.2003) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைமகள் வீதி,*
*நல்லூர்.* (18327)

தகவல்:
அ.விக்னராஜா
*(S.L.T. யாழ்ப்பாணம்)*
*(மகன்)*

## செல்லத்துரை பரணீதரன்

**(யாழ்.மத்திய கல்லூரி 2004 வர்த்தகப்பிரிவு மாணவன்)**

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை பரணீதரன் 20.05.2003 அன்று அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2003) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சிவியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

*நீர்வேலி வடக்கு* (சி-28043)

தகவல்:
வே.செல்லத்துரை *(தந்தை)*

## திருமதி சவிரிமுத்து பொலின்

கிளாலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சவிரிமுத்து பொலின் நேற்று (22-05-03) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை சவிரிமுத்து அவர்களின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24-05-03) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.02,மிஷன் கார்மேல் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (18328)

தகவல்:
பிள்ளைகள்.

## சின்னத்தம்பி கந்தசாமி (கண்ணுத்துரை)

யாழ். சுழிபுரம் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி நேற்று 22.05.2003 மாலை காலமானார்.

இவர் நாகம்மாவின் அன்புக்கணவரும் சுமதி (ஜேர்மனி), சிறிகாந்தன (ஜேர்மனி), வளர்மதி (ஜேர்மனி), மாலதி, கோமதி, அருள்மதி, ஜெயமதி, துசாந்தன் (கண்ணன்), சுதாமதி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கணேஷ் (ஜேர்மனி), லட்சுமணர், இராசன் ஆகியோரின் சகோதரரும் நடேசுவின் (ஜேர்மனி) மைத்துனரும், கணேசலிங்கம் (ஜேர்மனி), றொசானா (ஜேர்மனி), பாஸ்கரன் (ஜேர்மனி), ஜெகானந்தம், பஞ்சலிங்கம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2003) வெள்ளிக் கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுழிபுரம் தெற்கு,*
*சுழிபுரம்.* (18330)

தகவல்:
கா.பஞ்சலிங்கம்
*(மருமகன்)*

# வீட்டில் குப்பை கொளுத்திய சமயம் வெடி பொருள் வெடித்து ஒருவர் காயம்!

## அரியாலைப்பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மே23

குப்பை கொளுத்திய போது அதனுள் இருந்த வெடி பொருள் வெடித்ததில் கூலித்தொழிலாளி ஒருவர் கழுத்தில் படுகாயம் அடைந்தார். அரியாலைப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா சோமசேகரம் (வயது-52) என்பவரே காயமடைந்தவராவார்.

புங்கன்குளம் ரயில்வே நிலையத்தடியில் உள்ள வீடு ஒன்றில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி அங்கு சேகரிக்கப்பட்ட குப்பைகளை ஒன்று திரட்டி அவற்றைக் கொளுத்திய வேளையில் அதற்குள் இருந்து வெடி பொருள் ஒன்று பாரிய சத்தத்துடன் வெடித்துள்ளது.

குப்பையைக் கொளுத்தியவரின் கழுத்தை வெடித்த பொருளின் சிதறல் ஒன்று பதம் பார்த்தது.

சத்தம் கேட்டு அந்த இடத்துக்குச் சென்ற அயலவர்கள் அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவந்துள்ளனர். (ம-12-9)

# துரையப்பா விளையாட்டரங்கு இரு மாதங்களுக்குள் புனரமைப்பு

## தேசிய விளையாட்டு விழாவையொட்டி நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே23

எதிர்வரும் ஒகஸ்ட் மாதமளவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழாவினை முன்னிட்டு அடுத்த இரண்டு மாதங்களுக்குள் - துரிதகதியில் - யாழ். துரையப்பா விளையாட்டரங்கை புனரமைத்து முடிக்குமாறு யாழ்மாநகரசபை பணிக்கப்பட்டிருக்கிறது.

இதனடிப்படையில் விளையாட்டரங்கில் தண்ணீர் தாங்கிகள், சுற்று வேலிகள் அமைத்து இதர வசதிகளைக் கொண்டதாகவும் மைதானத்தை புனரமைப்பதற்கு யாழ்மாநகரசபை மிக விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மைதானத் தரையை மட்டப்படுத்துதல், நிலக்கீழ் குடிதண்ணீர் தாங்கிகள் மற்றும் குடிதண்ணீர்த் தாங்கிகளை அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் முதற்கட்டமாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான நிதியை விளையாட்டுத்துறை அமைச்சு ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - புனரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளமையினால், துரையப்பா விளையாட்டரங்கில் சுமார் 2மாத காலத்துக்கு விளையாட்டு நிகழ்வுகள் எதுவும் இடம்பெற அனுமதி வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

### மாட்டிறைச்சி பறிமுதல்

யாழ்ப்பாணம்,மே23

தக்க அனுமதியின்றி வெட்டி விற்கப்பட்ட 106 கிலோ நிறையுடைய மாட்டிறைச்சி பறிமுதல் செய்து அழிக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.

தனியார் இருவரினால் நாவலர் வீதியில் விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சியே கடந்த 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ் மாநகர சபையின் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் தலைமையிலான குழுவினால் கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

# என் மீதான குற்றச்சாட்டை நிரூபியுங்கள் பதவியை உடனே இராஜினாமாச் செய்வேன்

## மத்திய மாகாண அமைச்சர் இராதாகிருஷ்ணன் பேச்சு

கண்டி,மே23

"எனதுசமூக சேவை அமைச்சில் 54 லட்சம் ரூபா நிதி மோசடி இடம்பெற்றதாக இந்தச்சபையில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு வேண்டுமென்றே என் மீது சேறுபூச எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகும். அதனை நிரூபியுங்கள் உடனடியாகவே பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு வீடுக்குச் செல்வேன்.

- இப்படி ஆவேசமாகவும் ஆத்திரமாகவும் கூறினார் மத்திய மாகாண கல்வி, சமூக சேவைகள் அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன்

மத்திய மாகாண சபை நேற்று துரை மதியுகராஜா தலைமையில் கூடியது. அங்கு எதிர்க்கட்சி உறுப்பினரான அனுரா பெர்னாண்டோ (பொ.ஐ.மு.) மூக்குக் கண்ணாடிகளை விநியோகித்தது தொடர்பாக 54 லட்சம் ரூபாவுக்கு மோசடி நடந்திருப்பதாகச் சொன்னார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்ட இக்குற்றச்சாட்டை அமைச்சர் இராதாகிருஷ்ணன் அடியோடு மறுத்துரைத்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:- அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அகதிகளுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வந்தார். நுவரெலியா மாவட்டத்தில் 83 குடும்பங்களுக்கு வீடுகள் இல்லை. தேயிலை தொழிற்சாலையிலும் பாடசாலைகளிலும் அகதிகளாக இருக்கும் 602 பேருக்கு நிவாரணமாக தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும்.

மத்திய மாகாண பாடசாலைகளில் பணிபுரியும் 26 ஆயிரம் ஆசிரியர்கள் தமது ஒருநாள் வேதனத்தை வெள்ள நிவாரணத்துக்கு வழங்கி உதவுமாறு கேட்டுள்ளோம். மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் 58 பேரும் தங்களது ஒருநாள் வேதனத்தை வழங்க முன் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

-இவ்வாறு அவர் கூறினார்.

### புலிகளின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் அனுப்பியிருந்தார்.

இக்கடிதம் உடனடியாக நோர்வே தரப்பால் இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

"இந்த யோசனைகளை கவனமாக ஆராய்ந்து வருகிறோம். ஓரிரு தினங்களில் பதில் அனுப்பப்படும்" என்று அரச தரப்பின் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டார். (ம-3)

## அரசு உறுதிமொழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'சிரான்' உபகுழு அப்படித்தான் உருவாக்கப்பட்டது.

அது போன்றே இப்போது நாம் முன்வைத்துள்ள நிர்வாகக் கட்டமைப்பையும் அரசமைப்புக்கு வெளியில் நிறுவ முடியும்; நிறுவவேண்டும்.

அதை உடனடியாகச் செய்ய முடியாமல் இருக்கலாம். அதற்குக் கால அவகாசம் தேவைப்படலாம். அரசின் அந்தப் பிரச்சினையை நாம் புரிந்து கொள்கின்றோம்.

எனவே, எமது கோரிக்கையைச் சாதகமாகப் பரிசீலித்து, அதில் உள்ளவற்றை இன்ன காலவரையறைக்குள் நிறைவு செய்வோம் என்ற ஆக்கபூர்வமான உறுதி மொழியை அரசு வழங்கலாம். அத்தகைய உறுதிப்பாட்டை நோர்வே அங்கீகாரத்துடன் அரசு சமர்ப்பிக்குமானால் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் நாங்கள் பங்குபற்றத் தயாராக இருக்கின்றோம்.

ஒருவேளை, எமக்கு உரிய பதிலைத்தர அரசு தவறி, அதனால் அந்த மாநாட்டுக்குச் செல்லாத நிலை ஏற்படலாம். அப்படி நேர்ந்தால் எமது மக்களுக்கான குறிப்பிடத்தக்க அளவு நிதியை நாம் இழப்போம் என்பது உண்மைதான். அது வருத்தத்திற்குரியதுதான். ஆனாலும், எங்கள் மக்களுக்கு உள்ள உரிமையை - சின்னச் சின்ன விடயங்களைக் கூட இலங்கை அரசு நிறைவு செய்யத் தயாராக இல்லை என்ற செய்தியும் அந்த மாநாட்டுக்கும் அதில் பங்கு பற்றும் நாடுகளுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துச் செல்லப்படும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

அதிகாரங்கள் இல்லாத [illegible] சபைகள் போன்ற உள்ளூராட்சி [illegible]களைக் காட்டி எம்மைத் திருப்திப்படுத்த முடியாது.

தென்னிலங்கையில் சீருடையினரும் அவர்களினது உதவியாளர்களும் சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்களுக்கும் எமக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. எம்மீது சுமத்தப்படும் அக் குற்றச்சாட்டுக்களை நாம் மறுக்கிறோம். யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் அரசுக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் எந்த ஆயுத நடவடிக்கைகளிலும் நாம் ஈடுபடவில்லை.

இந்திய இராணுவ அதிகாரி ஜெனரல் நம்பியாரின் அறிக்கை எமக்கு உத்தியோக பூர்வமாக இன்னும் தரப்படவில்லை. எனினும், பத்திரிகைகளில் வாசித்து அறிந்து கொண்டோம். அது எமக்குத் தேவையற்ற ஒன்று.

யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் பளை, கிளிநொச்சி போன்ற மக்களின் வாழ்விடங்களில் இருந்து எமது படை நிலைகளை காடுகளுக்குள் நகர்த்தி, அப்பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர அனுமதித்துவிட்டோம்.

எம்மைப் பொறுத்தவரை எமது பிரதேசங்களில் மக்கள் குடியமர்வுக்கு நாம் முழு ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம். அரசுதான் தனது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் எமது மக்களைக் மீளக்குடியமரவிடாது தடுத்து வருகிறது - என்றார் தமிழ்ச்செல்வன்.

### அரசுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஜேந்திரகுமார் ஆகியோர் கொண்ட குழுவே வெளிநாட்டு ராஜதந்திரிகளைச் சந்தித்து வருகின்றது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸைச் சந்தித்து புலிகளின் யோசனை, உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் புலிகள் பங்குபற்றுதல் உட்பட பல விடயங்கள குறித்து கூட்டமைப்பினர் கலந்துரையாடினர்.

பிரிட்டிஷ் பிரதித் தூதரை இன்று முற்பகல் 10.30 மனிக்கு கூட்டமைப்பினர் சந்திக்க இருக்கின்றனர். (ம-3)

### ஈ.பி.டி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்களினால் கடத்திச் செல்லப்பட்ட பூவண்ணன் கொலை செய்யப்பட்டு, அவரது சடலம் முஸ்லிம் கிராமங்களில் ஒன்றான நிந்தவூரில் போடப்பட்டுள்ளமையானது தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் குரோதத்தைத் தோற்றுவித்து இரு சமூகங்களுக்கும் இடையில் இன்மோதலை ஏற்படுத்தி வேடிக்கை பார்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான தய சக்திகளிடமிருந்து தமிழ் - முஸ்லிம் மக்களை விழிப்பாக இருக்குமாறு வேண்டிக்கொள்ளும் அதேவேளை, மீண்டும் இவ்வாறான செயல்கள் தொடருமானால் மிகவும் பாரதூரமான நடவடிக்கை எம்மால் மேற்கொள்ளப்படும் என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

COMPUTER COURSES
NEW BATCHES - 3
BATCH - I
25.05.2003
முழுவிவரங்களும் - உள்ளே பக்கம் 10 இல்
IIS
(சி-28039)

BRIGHTMAN
பிறவுண் வீதி நீராவியடி யாழ்.நகா
சரளமாக உரையாட
புதிய பிரிவு சிங்களம்
BY : லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்:24.05.2003
SAT.2.30 p.m.
(18221)

MINI INFOTEL JAFFNA
mini INFOTEL LANKA 2003
A mini Infotel will be held for the first time in the Jaffna peninsula from the 27th to the 29th of June 2003 at the Jaffna Central College.
Infotel is the nation's premiere ICT show held once in two years in Colombo with Mini Infotel Exhibitions presented at specified locations.
Exhibitors are invited to book stall space immediately with the Infotel Secretariat to avoid disappointment.
The Infotel Secretariat
#51, Sri Marcus Fernando Mawatha, Colombo 07
Tel: 01-665261 / 074-713822 Fax: 074-713821
E-mail: infotel@srilanka.net
Infotel Regional Office
C/o Institute of Informatics Studies
#68 (100) Clock Tower Rd., Jaffna
Forging a new Jaffna with ICT

இதோ...
சாவகச்சேரியில்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
BY: MR.B.JOTHY
புதிய பிரிவு ஆரம்பம்:
25.05.2003 காலை 10 மணி
ஞானோதயா அக்கடமி
சங்கத்தானை.
(18287)

ஈசன் கல்வி நிலையம்
பௌதிகவியல
A/L 2004,2005
இலத்திரனியல்
SAT,SUN:5.00 p.m.
ஆரம்பம்:24.05.2003
மின்காந்தத்தூண்டல்
MON,FRI:5.00 p.m.
ஆரம்பம்:26.05.2003
திரு.R.குமரன்(B.Sc.)
(18232)

கணக்கீடு
A/L - 2005
தனிவியாபார முடிவுக்கணக்கு
ஆரம்பம்: நாளை 2.00 p.m.
A/L - 2004
பங்காளன் இளைப்பாறல்
ஆரம்பம்: நாளை 3.00 p.m.
ஆசிரியர்: S.தவா
B.Com.(HONS, Acc.Spl.)
NEW SCIENCE COLLEGE, JAFFNA
(18314)

CHEMISTRY
பலாலி வீதி, கந்தர்மடம்.
ORGANIC
ஆரம்பம்:23.05.2003
Mon.,Fri.6-7 p.m.
INORGANIC
Wed.6.30 - 7.30a.m.
Fri.4-5 p.m.
Paper class
Mon.,Fri.5-6
BY: அன்பழகன்
CENTRE
(சி-28002)

யாழ்.மாவட்டப் பட்டதாரிகளே!
★ சமூகசேவை உத்தியோகத்தர் ★ கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ★சமைசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்
ஆகிய போட்டிப் பரீட்சைகளுக்கு
யாழ்மாவட்டத்தின் பிரபல்ய ஆசிரியர்கள் குழுவால
★ பொது அறிவு ★ பொது உளச்சார்பு
ஆகிய பரீட்சை வினாத்தாள்களிற்கு அமைவாக தயார்ப்படுத்தல் வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.
பதிவுகளுக்கும் மேலதிக விவரங்களுக்கும் உடன் தொடர்பு கொள்ளவும்.
PAS
199, Main street, Jaffna,
Office Hours Sat. & Sun. 9.00 a.m.-2.00 p.m.
(சு7-28025)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.